# புதிய ஜனநாயகம்

ஜூலை 2016
ரூ.10.00




# பாசிச கோமாளி

# மோடியின் மிஷன்-2016:
# காட்டுவேட்டையின் புதிய அவதாரம்!

மேக் இன் இந்தியா, ஸ்டாண்ட் அப் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா என பிரதமர் நரேந்திர மோடி அடுத்தடுத்து அவிழ்த்துவிட்டிருக்கும் திட்டங்களைக் கேள்விப்பட்டுள்ள நமக்கெல்லாம், அவரின் கட்சி ஆளும் சத்தீஸ்கர் மாநிலத்தில் ''மிஷன்-2016'' என்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவது அவ்வளவாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. முன்னவற்றைப் போல இந்த நடவடிக்கை குறித்து பா.ஜ.க. அரசும் பெரிய அளவில் தம்பட்டம் அடித்துக் கொள்வதுமில்லை. காரணம், இதுவொரு போலீசு நடவடிக்கை; சொந்த நாட்டு மக்கள் மீது ஏவப்பட்டுள்ள போர் நடவடிக்கை.

''சத்தீஸ்கர் மாநிலத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் தடையாக உள்ள மாவோயிஸ்டுகளையும், அவர்களுக்கு ஆதரவான பழங்குடியினரையும் 2016-ஆம் ஆண்டின் இறுதிக்குள் மாநிலத்தை விட்டே விரட்டியடிப்பது அல்லது அழித்தொழிப்பதுதான் மிஷன் 2016-இன் நோக்கம்'' என பஸ்தார் போலீஸ் ஐ.ஜி. கல்லூரி அறிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சி.ஆர்.பி.எப். துணை இராணுவப் படை, சத்தீஸ்கர் மாநிலப் போலீசு மட்டுமின்றி, ஜன் ஜாக்ரான் அபியான், சமாஜிக் ஏக்தா மன்ச், விகாஸ் சங்கர்ஷ் சமிதி, நாக்ரிக் ஏக்தா மன்ச் என்ற பெயர்களில் இயங்கிவரும் குண்டர் படைகளும் இறக்கிவிடப்பட்டு, பழங்குடியின மக்கள் வசித்து வரும் பகுதி முழுவதும் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இதற்கு அப்பால், பழங்குடியின மக்கள் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தவும் தயாராகி வருகிறது, பா.ஜ.க. அரசு.

கனிம வளங்களும் பழங்குடியின மக்களும் நிறைந்திருக்கும் சத்தீஸ்கர், ஜார்கண்டு மாநிலங்களில் கடந்த பத்தாண்டுகளாகவே ஒரு உள்நாட்டுப் போரை அறிவித்து நடத்திவருகிறது, மைய அரசு. முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு இந்த மாநிலங்களின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் மாவோயிச பயங்கரவாதம் தடையாக இருப்பதாகக் கூறி, காட்டு வேட்டை என்ற பெயரில் அம்மாநில பழங்குடியின மக்கள் மீது போர் தொடுத்தது. அச்சமயத்தில் சல்வா ஜூடும் என்ற சட்டவிரோத குண்டர் படை உருவாக்கப்பட்டு, முதுகுத்தண்டை சில்லிடச் செய்யும் அடக்குமுறைகள் பழங்குடியின மக்கள் மீது ஏவப்பட்டன.

அக்காட்டு வேட்டை நடவடிக்கையின்போது பல்லாயிரக்கணக்கான பழங்குடியினர் தங்களது கிராமங்களிலிருந்து விரட்டப்பட்டு, சொந்த நாட்டிலேயே அகதி களாக்கப்பட்டு வதை முகாம்களில் அடைக்கப்பட்டனர். சிறை, சித்திரவதை, பாலியல் வல்லுறவு, போலி மோதல் கொலைகள் என நடந்த அரசு பயங்கரவாத அட்டூழியங்களைத் தட்டிக் கேட்ட, அம்பலப்படுத்திய அறிவுத்துறையினர் மாவோயிஸ்டுகளின் அனுதாபிகளாக முத்திரை குத்தப்பட்டனர்.

புகழ்பெற்ற குழந்தை மருத்துவரும் பி.யு.சி.எல். என்ற மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவருமான பினாயக் சென் தேசத் துரோக வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டார். காந்தியவாதியான ஹிமான்ஸு குமாரின் ஆசிரமம் இடித்துத் தள்ளப்பட்டது. இதன் மூலம் காட்டு வேட்டைக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை அடக்கிவிட முடியும் என எதிர்பார்த்த மன்மோகன் சிங் அரசு மேலும் மேலும் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுப் போனது.

காட்டுவேட்டைக்கு எதிராக நாடெங்கும் பரவலாக எழுந்து எதிர்ப்பின் காரணமாக, சல்வா ஜூடும்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

அரசுப் படையினரால் கும்பல் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட பெத்தகேலூர் கிராமத்தைச் சேர்ந்த பதின்வயது சிறுமி (இடது - முகம் மறைக்கப்பட்டுள்ளது). அருகில் அரசுப் படையினரால் தாக்கப்பட்ட சிறுமியின் அத்தை.



புதிய
ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 31 இதழ்: 9
ஜூலை 2016

உள்நாடு
தனி இதழ்: ரூ. 10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com
தொலைபேசி: 94446 32561


# எச்சரிக்கை
# வரவிருக்கும் நாட்கள் மிகக் கொடியவை!

இந்த அரசமைப்பின் எல்லா உறுப்புகளும் தோல்வியடைந்து விட்டன என்பதை முரசறைந்து கூறும் அளவுக்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன என்ற போதிலும், தமிழகத்தைப் பொருத்தவரை ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றிதான் இதற்குத் தலையாய சான்று. சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மக்கள் அதிகாரம் அமைப்பினர் “மூடு டாஸ்மாக்கை” என்ற முழக்கத்தின் அடிப்படையில் கடைகளை மூடுவதற்கான போராட்டங்களை நடத்தியபோது, தேர்தல் நேரத்தில் அப்போராட்டங்கள் தேவையற்றவை என்று சிலர் எண்ணினர்.

படிப்படியாகக் கடையை மூடுவதாக வாக்குறுதியளித்த ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்தார். கடை திறந்திருக்கும் நேரத்தை இரண்டு மணி நேரம் குறைப்பதாக அறிவித்தார். அது பொய் என்பது அன்றைய தினமே அம்பலமானது. “தற்போது 500 கடைகளை மூடியிருப்பதாகச் சொல்வதும் பொய். மக்கள் கடுமையாகப் போராடிய இடங்களிலும், விற்பனையாகாத இடங்களிலும் சேர்த்து சுமார் 81 கடைகள் மட்டுமே மூடப்பட்டிருக்கின்றன” எனத் தினமலர் நாளேடு கூறுகிறது. டாஸ்மாக் கடைகள் மூலம் தினந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் இலஞ்சம் வசூலிக்கும் அதிகார வர்க்கமும் போலீசும், தத்தம் வட்டாரத்தில் உள்ள கடைகள் மூடப்படுவதை எதிர்க்கிறார்கள் என்ற உண்மையையும் இந்தச் செய்தி அம்பலமாக்கியிருக்கிறது.

இனி மதுவிலக்கு கோரும் மக்கள் என்ன செய்ய வேண்டும்? அடுத்த தேர்தலுக்காக 5 ஆண்டுகள் காத்திருந்து, இன்னும் சில இலட்சம் இளைஞர்கள் போதை அடிமைகளாக மாறுவதை வேடிக்கை பார்க்க வேண்டுமா? அல்லது சசி பெருமாளைப் போல நீதிமன்றத்தை நம்பி உயிர் துறக்க வேண்டுமா? மக்கள் நேரடியாகக் களத்தில் இறங்கி கடைகளை மூடுவது ஒன்றுதான் தீர்வு என்பதையே ஜெயலலிதாவின் ஒருமாத கால ஆட்சி நமக்கு மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறது.

மாறாக, இது புதிய ஆட்சி போலவும், புதிய துவக்கம் போலவும், கடந்த ஐந்தாண்டுகால அசிங்கங்கள் மற்றும் அராஜகங்களின் தொடர்ச்சி அல்ல என்பது போலவுமான ஒரு தோற்றத்தை ஏற்படுத்த ஜெயலலிதாவின் ஊடக அடிமைகள் தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய முயற்சிகளைக் கேலிக் குரியதாக்கும் வகையிலான நிகழ்வுகளை அ.தி.மு.க. அரசே அன்றாடம் அரங்கேற்றுகிறது.

தன்னுடைய ஊழல் நோக்கத்துக்காக தமிழகத்தின் மொத்த மின் தேவையில் மூன்றில் ஒரு பங்கினைத் தனியாரிடமிருந்து கொள்முதல் செய்து, மின்வாரியத்தை மீளாக்கடனில் தள்ளியிருக்கும் ஜெ. அரசு, “தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகிவிட்டது” என்று பச்சையாகப் புளுகுகிறது. கூலிப்படைக் கொலைகளும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், கொள்ளைகளும் தமிழகமெங்கும் தலைவிரித்தாடுகின்றன. வினுப்பிரியா என்ற பெண்ணுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக புகார் கொடுக்கப்போன அவரது தந்தையிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டு நடவடிக்கையும் எடுக்காத போலீசின் குற்ற நடத்தை காரணமாக அந்தப் பெண் தற்கொலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள். ஆனால், தனது தலைமையில் காவல்துறையின் சிறப்பான நடவடிக்கைகள் காரணமாக தமிழகம் அமைதிப்பூங்காவாகத் திகழ்வதாகக் கூச்சமேயில்லாமல் பேசுகிறார் ஜெயலலிதா.

படிப்படியாக மதுவிலக்கு என்ற அறிவிப்பு மட்டுமல்ல, இந்த அரசு வாய் திறந்து பேசுவது அனைத்துமே பொய் என்று தெளிவாகத் தெரிகிறது. ஜெ. கும்பல் பொதுச்சொத்துகளையும் அரசுக் கருவூலத்தையும் கொள்ளையிட்டு, தமிழகத்தை நிதி நெருக்கடியிலும் கடனிலும் தள்ளியிருப்பதால், வரவிருக்கும் நாட்கள் இன்னும் கொடியதாக இருக்கும். இந்த அரசமைப்பில் நம்பிக்கை வைத்து முறையிட்டோ, அன்றி ஆட்சி மாற்றத்துக்காகக் காத்திருந்தோ நீதி பெறுவது சாத்தியமில்லை என்ற உண்மையை, அ.தி.மு.க. ஆட்சி என்று அழைக்கப்படும் இந்தக் குற்றக்கும்பல், தனது சொந்த நடவடிக்கைகளின் மூலம் வெகு விரைவில் மக்களுக்குப் புரிய வைக்கும். ●

# ஆர்.எஸ்.எஸ்.இன் தேசபக்தியைத் தோலுரித்த ரகுராம் ராஜன்!

**பொதுத்துறை வங்கிகளில் கடன் வாங்கி ஏப்பம் விட்ட தரகு முதலாளிகளைக் காப்பாற்றவே, ரிசர்வ் வங்கி ஆளுநர் பதவியிலிருந்து ரகுராம் ராஜனை வெளியேற்றுவதற்குத் துடியாய்த் துடித்தது, ஆர்.எஸ்.எஸ்.**

ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ரகுராம் ராஜன், ‘‘தான் பதவி நீட்டிப்பு கோரப் போவதில்லை; செப்டம்பரில் தனது பதவிக் காலம் முடிந்த பிறகு, ஆசிரியப் பணிக்குத் திரும்பச் செல்லவிருக்கிறேன்’’ என அறிவித்ததையடுத்து, இந்தப் பிரச்சினைக்கு மங்களம் பாடிவிட்டன, ஊடகங்கள். ஆனால், இப்பிரச்சினையின் பின்னே புதைந்து கிடக்கும் அபாயங்கள் இனிதான், அதன் முழு பரிமாணத்தோடு வெடிக்கவிருக்கின்றன.

பொதுத்துறை வங்கிகளிடம் கடன் வாங்கி அவற்றுக்கு நாமம் போடும் விசயத்தில் இந்தியத் தரகு முதலாளிகள் மல்லையாவை விஞ்சியவர்கள். கடன்களை மறுசீரமைப்பது என்ற பெயரில் கடனைத் திரும்பக் கட்டாமலேயே தந்திரமாக இழுத்தடித்து வந்த தரகு முதலாளிகளுக்கும், அதற்குத் துணை நின்ற வங்கி நிர்வாகம் மற்றும் நிதியமைச்சகம் ஆகியவற்றுக்கும் கிடுக்கிப்பிடி போட்டு, சொத்தை விற்று கடனைக் கட்டுமாறு செய்தார் ரகுராம் ராஜன். இதன் விளைவாகத்தான் ஊரறிந்த சி.ஐ.ஏ ஏஜெண்டும், ஆளும் வர்க்கத்தின் பங்காளா நாயுமான சுப்பிரமணியசாமி, ரகுராம் ராஜன் அமெரிக்க குடியுரிமை வைத்திருப்பவர் என்றும் இந்தியா மீது விசுவாசமில்லாதவர் என்றும் ஏசினார்.

அம்பானி, அதானி, நிதின் கட்கரி ஆகிய தரகு முதலாளிகளின் அறிவிக்கப்படாத கணக்குப் பிள்ளையான ஆர்.எஸ்.எஸ். இன் குருமூர்த்தி, சு.சாமி போல பச்சையாகவும் கொச்சையாகவும் தாக்காமல், ரொம்பவும் ஆதாரபூர்வமாக விமரிசிக்கும் தோரணையில், ரகுராம்ராஜனின் அணுகுமுறை காரணமாக உள்நாட்டுத் தொழில்கள் நசிந்து விட்டதாக குற்றம் சாட்டினார்.

முஸ்லிம்களைக் காட்டிலும் அதிகமாக ரகுராம் ராஜன் மீது ஆர்.எஸ். எஸ்.காரர்கள் வெறுப்பைக் கக்குவதைப் பார்த்து, அவர் ஒரு இடதுசாரி சார்பு பொருளாதாரக் கொள்கையாளரோ என்று யாரும் சந்தேகப்படவேண்டாம். அவர் புதிய தாராளவாதக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்தான். எனினும், பொதுத்துறை வங்கிகளை உங்கள் விருப்பம் போலக் கொள்ளையடிப்பதை அனுமதிக்க இயலாது என்று இந்தியப் பெரு முதலாளிகளிடம் சொன்னார் ரகுராம் ராஜன். ஒரு வரியில் சொன்னால், இதுதான் அவர் செய்த மாபெரும் தேச விரோதக் குற்றம்.

### வட்டி வீதத்தை யார் தீர்மானிப்பது?

‘‘வங்கி வட்டி வீதத்தைக் குறைக்க மறுத்ததன் மூலம் ராஜன் இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துவிட்டதாகவும்; இதனால் வேலை வாய்ப்புகள் உருவாவதுதடைபட்டுப் போனதாகவும்; சிறுதொழில்களுக்குக் கடன் கொடுப்பதற்காக மோடி அரசு கொண்டு வந்த முத்ரா வங்கித் திட்டம் முடங்கிப் போனதாகவும்’’ ரகுராம் ராஜன் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறார் குருமூர்த்தி. சுவாமியால் தேசத் துரோகியாகக் காட்டப்பட்ட ராஜனை வளர்ச்சியின் எதிரியாக்கி நிறுத்துகிறார், குருமூர்த்தி.

முஸ்லிம்களைக் காட்டிலும் அதிகமாக ரகுராம் ராஜன் மீது ஆர்.எஸ்.எஸ். காரர்கள் வெறுப்பைக் கக்குவதைப் பார்த்து, அவர் ஒரு இடதுசாரி சார்பு பொருளாதாரக் கொள்கையாளரோ என்று யாரும் சந்தேகப்படவேண்டாம். அவர் புதிய தாராளவாதக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்தான். எனினும், பொதுத்துறை வங்கிகளைத் தரகு முதலாளிகள் தங்கள் விருப்பம் போலக் கொள்ளையடிப்பதை அனுமதிக்க மறுத்தார், அவர்.



ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன்.

மோடி அரசு கொண்டு வந்திருக்கும் முத்ரா வங்கித் திட்டம் என்பது, சிறு தொழில்களுக்கு நேரடியாகக் கடன் கொடுக்கும் திட்டமல்ல. மாறாக, சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்கின்ற நிதி நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம்தான் அது. கந்து வட்டிக்கும்பலுக்கு கடன் கொடுக்க முட்டுக்கட்டை போடுகிறாரே என்பதுதான் மார்வாடிக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியினரின் குமுறல்.




இந்தியத் தரகு முதலாளிகளின் கைக்கூலிகள்:
சுப்பிரமணிய சுவாமி (இடது) மற்றும் எஸ்.குருமூர்த்தி.

வங்கி வட்டி வீதத்தை ராஜன் குறைக்க மறுத்து விட்டார் எனச் சொல்லப்படும் குற்றச்சாட்டும் கூட, உண்மைக்குப் புறம்பானது. கடனுக்கு வட்டி எவ்வளவு என்பதைக் கடன் கொடுக்கும் வங்கி தீர்மானிப்பதா, கடன் வாங்கும் தரகு முதலாளிகள் தீர்மானிப்பதா? கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 1.50 சதவீதம் அளவிற்கு வட்டியைக் குறைத்து, தற்பொழுது அதனை 6.50 சதவீதமாக நிர்ணயித்திருக்கிறது ரிசர்வ் வங்கி. ஆனால், மோடி அரசும் தரகு முதலாளிகளும் அதனை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும் எனக் கோரியதற்குத்தான் ராஜன் உடன்பட மறுத்துவிட்டார்.

''உங்களின் சேமிப்பை இந்தியாவிலுள்ள ஏதாவதொரு பாதுகாப்பான வங்கியில் 4 சதவீத வட்டியில் டெபாசிட் பண்ண முன் வருவீர்களா?'' எனக் கேட்டுத் தரகு முதலாளிகளின் கோரிக்கையை ஒதுக்கித் தள்ளிய ராஜன், வங்கி சேமிப்புகளிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு வாழ்க்கையை நடத்தும் பொதுமக்களையும் ரிசர்வ் வங்கி கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

தொழிலாளர்களின் பி.எஃப். வட்டியைக் குறைத்து, அவர்கள் வயிற்றிலடிக்கும் மோடி தேசபக்தராம். முதலாளிகள் வாங்கும் கடனுக்கு வட்டியைக் குறைத்தால், சேமிப்புகள் மூலம் கிடைக்கும் வட்டியில் வாழ்க்கை நடத்தும் முதியவர்களின் நலன் பாதிக்கப்படும் என்று சொல்லும் ராஜன் தேசவிரோதியாம்! இந்தியாவைப் பற்றித் தெரியாதவராம்!

பொருளாதாரத் தேக்கம் நிலவும் காலத்தில் வங்கி வட்டியைக் குறைப்பதன் மூலம் பணப் புழக்கத்தை ஏற்படுத்தி, அதன் வழியாக வளர்ச்சியைக் கொண்டுவர முடியும் என்று நம்பச்சொல்கிறது மோடி கும்பல். ஆனால், இந்த வழியானது ஒட்டுமொத்த நாட்டையும் புதைகுழிக்குள் இழுத்துச் செல்லும் வழி என்பதை அமெரிக்காவில் 2008-இல் வெடித்த சப்-பிரைம் கடன் நெருக்கடி உணர்த்தியிருக்கிறது. சப்-பிரைம் நெருக்கடி வெடிப்பதற்கு முன்பாக அமெரிக்காவில் வங்கி கடனுக்கான வட்டி 0% சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தையும், அவ்வட்டி குறைப்பால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளாதார ஏற்றம், 2008-இல் உடைந்து உலக நாடுகள் அனைத்தையுமே புதைசேற்றுக்குள் தள்ளியதையும், கணிசமான அமெரிக்க மக்கள்





தமது நிறுவனங்களின் சொத்துக்களை விற்றாவது கடனை அடைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் தரகு முதலாளிகள் (இடமிருந்து) அனில் அம்பானி, கௌதம் அதானி மற்றும் சசி ரூயா.

ஒட்டாண்டிகளாகித் தெருவிற்கு வந்ததையும், அதிலிருந்து மீண்டு வர முடியாமல் உலகமே தத்தளிப்பதையும் நாம் அனுபவித்து வருகிறோம்.

அந்தப் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இந்தியப் பொதுத்துறை மற்றும் தனியார் துறை வங்கிகள் திவாலாகிவிடாமல் தப்பித்துக் கொண்டதற்கு, பணக் கொள்கை மீது ரிசர்வ் வங்கிக்கு இருந்த கட்டுப்பாடுகள்தான் காரணம். ரிசர்வ் வங்கியின் கையில் உள்ள இந்த அதிகாரத்தைப் பறித்துவிட வேண்டும் என்பதுதான் மோடி அரசின் விருப்பம்.

### வாராக் கடன் என்ற புற்றுநோய்

வங்கிகள் கொடுத்திருக்கும் கடனுக்கான வட்டி 60 நாட்களுக்கு மேல் செலுத்தப்படாமல் இருந்தால், அவற்றை வாராக் கடனாக வரையறுக்க வேண்டும் என்கிறது, வங்கிகளின் நிர்வாக விதி. இந்திய வங்கிகளில், குறிப்பாக பொதுத்துறை வங்கிகளில் இப்படிபட்ட வாராக் கடன் எவ்வளவு இருக்கிறது என்பது நீண்ட காலமாகவே மர்மமாக இருந்துவந்த நிலையில், அந்த இரகசியத்தை வங்கிகளின் சொத்து குறித்து நடத்தப் பட்ட ஆய்வுகளின் மூலம் உடைத்து வெளிக் கொண்டு வந்தார், ரகுராம் ராஜன்.

கடந்த அக்டோபர் 2015 தொடங்கி டிசம்பர் 2015 முடியவுள்ள காலாண்டு அறிக்கையில், வங்கிகள் தங்களிடம் நான்கு இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வாராக் கடன் இருப்பதாகக் கணக்குக் காட்டின. ஆனால், ராஜன் எடுத்த நடவடிக்கையின் விளைவாக வங்கிகளின் அடுத்த காலாண்டு அறிக்கையில் (ஜன.2016-மார்ச் 2016) வாராக் கடன் ஏறத்தாழ 6 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இருப்பது தெரிய வந்தது. வெறும் மூன்று மாத இடைவெளியில் வங்கிகளின் வாராக் கடன் 50 சதவீதம் அதிகரித்து ஆறு இலட்சம் கோடி ரூபாயைத் தொட்டிருப்பது அசாதாரணமானது மட்டுமல்ல, குற்றப் புலனாய்வு விசாரணைக்கும் உரியது.

இந்த வாராக் கடன்களில் பெரும்பகுதி இந்தியத் தரகு முதலாளிகளுக்குத் தரப்பட்டு நிலுவையில் இருப்பவை என்பது ஏற்கெனவே அம்பலமான உண்மை. இந்தியாவின் முதல் பத்து பெரு நிறுவனங்கள் வங்கிகளுக்குத் திருப்பித் தர வேண்டிய கடன் தொகை 7.5 இலட்சம் கோடி என்றும், இதில் சரிபாதி வாராக் கடனாக இருப்பதாகவும் குறிப்பிடுகிறது, கிரெடிட் சுயிஸ் இந்தியா என்ற அமைப்பு. இந்த வாராக் கடன் பட்டியலில் சேர்க்கப் படாமல், மோசமான கடன்கள் என வகைப் படுத்தப்பட்ட கடன்களின் நிலுவையையும் சேர்த்தால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கொடுத்த கடன்களின் விளைவாக பொதுத்துறை வங்கிகள் திவால் நிலையின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருப்பதை யாரும் புரிந்துகொள்ள முடியும்.

வங்கிகளிடமிருந்து 1,21,000 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்றுள்ள அனில் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமம், அதற்கு ஆண்டு வட்டியாக 8,299 கோடி ரூபாய் செலுத்த வேண்டும். ஆனால், அந்தக் குழுமத்தின் வரி விதிப்புக்கு முந்தைய ஆண்டு விற்ற முதல் வரவே 9,848 கோடி ரூபாய்தான். இது போல ரிலையன்ஸ் குழுமத்தைச் சேர்ந்த ரிலையன்ஸ் இன்ஃபராஸ்ட்ரக்சர், ரிலையன்ஸ் டிஃபன்ஸ் நிறுவனங்களும் வட்டி கட்டக்கூடிய அளவிற்கு வருமானம் ஈட்டுவதில்லை எனக் கூறப்படுகிறது. ரிலையன்ஸ் நிறுவனம் மட்டுமல்ல, எஸ்ஸார், அதானி, ஜே.பி. எனப் பல குழுமங்களின் நிலையும் இதுதான்.

வங்கியில் வீட்டுக் கடன் வாங்கிய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களோ, விவசாயக் கடன் வாங்கிய குடியானவனோ, கல்விக் கடன் வாங்கிய பெற்றோரோ கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால், அவர்கள் வீட்டுக்குக் குண்டர்களை, போலீசை அனுப்பி, சொத்துக்களை ஜப்தி செய்யும் வங்கி நிர்வாகங்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள் அசலை, வட்டியைக் கட்டாமல் திட்டமிட்டே ஏய்ப்பது தெரிந்தும், அவர்கள் வாங்கிய கடன்களுக்கான தவணையை, கெடுவைத் தள்ளிவைத்து தில்லுமுல்லு செய்து வருகின்றன.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கடனைக் கொடுப்பதிலும், அதனை வசூலிக்காமல் கெடு காலத்தைத் தள்ளிவைத்து கடனை மறுசீரமைப்பதிலும், கடன்களைத் தள்ளுபடி செய்வதிலும் வங்கி நிர்வாகத்திற்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் இடையே இருந்துவரும் கிரிமினல் தொடர்பைத்தான் ரகுராம் ராஜன் தனது நடவடிக்கைகள் மூலம் துண்டித்துவிட முயற்சித்தார்.

வங்கிகள் தமது கடன்கள் அனைத்தையும் மார்ச் 2017-க்குள் ஒழுங்கமைப்பு செய்து, அவற்றை வசூலிக்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும்; நிலுவையில் உள்ள கடன்களின் கெடு தேதிகளைத் தள்ளிவைத்து மறுசீரமைப்பு செய்யக் கூடாதென்றும் உத்தரவிட்ட ராஜன், கடனைக் கட்டாமல் ஏய்த்துவந்த கார்ப்பரேட் நிறுவனங்களைத் தமது சொத்துக்களை விற்றுக் கடனை அடைக்க வேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கினார்.

இதன் காரணமாக அனில் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமம் 60,000 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும்; எஸ்ஸார் குழுமம் 50,000 கோடி ரூபாய் சொத்துக்களையும்;கௌதம் அதானி குழுமம் 6,000 கோடி ரூபாய் சொத்துக்களையும்; டாடா நிறுவனம் இங்கிலாந்திலுள்ள 17,400 கோடி ரூபாய் சொத்துக்களையும்; ஜே.பி. குழுமம் 24,000 கோடி ரூபாய் சொத்துக்களையும்; லான்கோ குழுமம் 25,000 கோடி ரூபாய் சொத்துக்களையும்; வீடியோகான் குழுமம் 9,000 கோடி ரூபாய் பெறுமான சொத்துக்களையும் விற்றுக் கடனைக் கட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

> விஜய் மல்லையாவின் பகட்டான, ஊதாரித்தனமாக வாழ்க்கையை ராஜன் கேள்விக்குள்ளாக்கியபொழுது, தனிப்பட்ட வாழ்க்கையை வியாபாரத்தோடு தொடர்புபடுத்திப் பேசக்கூடாதென அதிகார வர்க்கம் கொதித்தெழுந்தது. ''வங்கிகளிலுள்ள பொதுப்பணத்திலிருந்து கடன் வாங்கிய ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து கேள்வி கேட்கப் பொதுமக்களுக்கு உரிமையுண்டு'' எனப் பதிலடி தந்தார், ராஜன்.

### தரகு முதலாளிகள்: அரசின் செல்லப்பிள்ளைகள்

இந்தியத் தரகு முதலாளிகள் இப்படிபட்ட நெருக்கடிகளை இதற்கு முன் சந்தித்ததேயில்லை. அக்கும்பல், தனது பிறப்பிலிருந்தே, குறிப்பாக நாடு 'சுதந்திர' மடைந்த பிறகு, அரசின் செல்லப் பிள்ளைகளாகவே வளர்க்கப்பட்டனர். மூலதனம் தொடங்கி இயற்கை வளங்கள் வரையில், மானியம் தொடங்கி வரிச் சலுகை வரையில் அனைத்தும் அவர்கள் விரும்பியபடியே அரசாலும், ஆளும் வர்க்கக் கட்சிகளாலும் செய்து கொடுக்கப்பட்டன.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அரசு முறைகேடான சலுகைகளை வழங்கி ஊட்டி வளர்க்கக் கூடாது. மாறாக, கார்ப்பரேட் நிறுவனங்கள் சட்டத்திற்கு உட்பட்டு, சந்தையில் போட்டியிட்டு தொழிலை நடத்த வேண்டும்; இல்லையென்றால் மூடிவிட்டுச் சென்றுவிட வேண்டும் என்கிறார் ராஜன். மேலும், இந்திய தரகு முதலாளிகளுக்கும் இந்திய அரசிற்கும் இடையேயான இந்த நெருக்கமான உறவுதான் இந்தியா எதிர்கொள்ளும் மிகப்பெரும் அபாயம் என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார். இந்த அணுகுமுறைதான் இந்தியத் தரகு முதலாளிகளையும், அவர்களது பாதுகாவலர்களான ஆளும் வர்க்கக் கட்சிகளையும் ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கிறது.

கிராமப்புறங்களில் இரட்டை டம்ளர் உள்ளிட்ட தீண்டாமைக் கொடுமைகளை, சாதிய பழக்கவழக்கங்களைக் கேள்விக்குள்ளாக்குபவர்களைப் பார்த்து, ''தம்பி ஊருக்குப் புதுசா?'' என ஆதிக்க சாதிவெறியர்கள் கேட்பது வழக்கம். அதுதான் ராஜன் விவகாரத்திலும் நடக்கிறது. ராஜன் இந்திய அரசிற்கும் தரகு முதலாளிகளுக்கும் இடையேயான கள்ளக்கூட்டை, செல்லப்பிள்ளைத் தனத்தைக் கேள்விக்குள்ளாக்கியவுடன், ''ராஜன் இந்தியாவைப் புரிந்து கொள்ளவில்லை; அவர் திறமையான பொருளாதார நிபுணராக இருக்கலாம். ஆனால், இந்தியப் பொருளாதார நிபுணர் அல்ல'' என ஆர்.எஸ்.எஸ். கும்பல் தரகு முதலாளிகளைக் காப்பாற்றும் விசுவாசத்தோடு ராஜனை வசைபாடியது.

அரசின் கட்டுப்பாட்டிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களை விடுவித்து, அரசின் ஆதரவின்றி சுயேச்சையாக சந்தையில் போட்டியிடச் செய்ய வேண்டும் என நியாயவாதம் பேசிய தரகு முதலாளித்துவக் கும்பல், தனக்கென்று வரும்பொழுது தட்டைத் திருப்பிப் போட்டுத் தட்டுகிறது. ஒருபுறம் தங்களின் தொழிலுக்கும், இலாபத்திற்கும் அரசின் பாதுகாப்பு, நிதியுதவிகளைக் கோரும் இவர்கள், இன்னொருபுறமோ எந்தவொரு சட்டமும், அரசு நிறுவனமும் தங்களைக் கட்டுப்படுத்தக் கூடாதென்றும் கோருகிறார்கள்.

மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.), மைய தணிக்கைத் துறை (சி.ஏ.ஜி.), மைய ஊழல் ஒழிப்புத் துறை (சி.வி.சி.) ஆகிய மூன்று ''சி''-க்களும் இந்தியாவை நிர்வகிக்க அனுமதிக்கக்கூடாது என்றார், வங்கிக் கடனை ஏப்பம் விட்டிருக்கும் அனில் அம்பானி. இதனை அப்படியே வழிமொழிந்தார் மைய அமைச்சரும் தரகு முதலாளியுமான நிதின் கட்கரி. கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி விதிப்பைக் கைவிட வேண்டும் என்கிறார், சு.சாமி. காங்கிரசு அரசு கொண்டு வந்த முன் தேதியிட்டு வருமான வரி வசூலிக்கும் விதியை ஆட்சிக்கு வந்தவுடனேயே ஊறுகாய் பாட்டிலுக்குள் போட்டு அடைத்தது, மோடி அரசு.

வாங்கிய கடனுக்கு வட்டியைக் கட்டச் சொன்னால், பொருளாதாரத் தேக்கம் நிலவுகிறது என நிதியமைச்சரே தரகு முதலாளிகளுக்காக வக்காலத்து வாங்





தமது பி.எஃப். பணத்தை முடக்கத் திட்டமிட்ட மோடி அரசின் சதியை எதிர்த்துப் போர்க்குணமிக்க போராட்டம் நடத்திய பெங்களூரு ஆயுத்த ஆடை பெண் தொழிலாளர்கள். (கோப்புப் படம்)

குகிறார். இந்தப் பொருளாதார தேக்கம் நிலவும் நேரத்தில்தான், டிராக்டர் கடன் வாங்கிய விவசாயி பாலனிடமிருந்து கடனை வசூலிக்க போலீசை ஏவியது வங்கி நிர்வாகம். கல்விக் கடனைக் கட்டாத மாணவர்கள் வங்கி வேலைகளுக்கான போட்டித் தேர்வுகளில் போட்டியிட முடியாது என உத்தரவிட்டது ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா. ஆனால், பல்லாயிரம் கோடிகளில் கடன் வாங்கி ஏப்பம் விட்டு வரும் தரகு முதலாளிகளோ, அரசால் சலுகை அளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றனர். இந்தக் கூட்டுக் களவாணித்தோடு ஒத்துப்போக மறுத்த ராஜனைத்தான் தேசத் துரோகி என முத்திரை குத்துகிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

## மோடியின் ‘சாதனைகளை’ப் புட்டுவைத்த ராஜன்

‘‘மேக் இன் இந்தியா’’ திட்டத்தை அறிவித்துள்ள மோடி, இந்தத் திட்டம் இந்தியாவை உலகின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக மாற்றக் கூடிய மந்திரக்கோல் எனக் காட்டி வருகிறார். அதாவது, கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிக்கும் கதையாக, இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில்களைத் தொடங்க போட்டி போடுமென்றும்; அப்படித் தொடங்கப்படும் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்து, சர்வதேச சந்தையில் சீனாவின் இடத்தை இந்தியா பிடிக்கும் என்றும் ஒரு மல்டி கலர் கனவை இறக்கிவிட்டார், மோடி.

கார்ப்பரேட் ஊடகங்களும், முதலாளிகளும் இதை வைத்து ஆதாயம் பார்க்கலாம் என்ற எதிர்பார்ப்பில் மோடியின் இந்தத் திட்டத்தை வாராது வந்த மாமணி போல புகழ்ந்து தள்ளிக்கொண்டிருந்த சமயத்தில், ரகுராம் ராஜன் இந்த திட்டத்தின் ஓட்டைகளைப் புட்டு வைத்தார். சப்-பிரைம் கடன் நெருக்கடியால் ஏற்பட்ட பொருளாதார தேக்கத்திலிருந்து உலக நாடுகள் இன்னமும் மீண்டு வர இயலாத நிலையில், இந்தியாவை உலகின் ஏற்றுமதி மையமாக மாற்றுவது சாத்தியமே இல்லாத ஒன்று எனக் கூறிய ராஜன், உலகச் சந்தைக்காக உற்பத்தி செய்வதற்கு மாறாக, உள்நாட்டு சந்தைக்காக உற்பத்தி செய்யும் ‘‘இந்தியாவிற்காகத் தயாரிப்போம்’’ (மேக் ஃபார் இந்தியா) திட்டத்தைத் தொடங்குமாறு கூறி, இது ஒன்றுதான் பொருளாதாரத்தை முன்னேற்ற சாத்தியமான வழி என்றும் விளக்கி, இந்து தேசியவாதக் கும்பலின் மூக்கை உடைத்தார் ‘அந்நியர்’ ராஜன்.

2015-16 ஆம் ஆண்டு நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் (ஜி.டி.பி.) 7.2 சதவீதம் வளர்ச்சியடைந்திருப்பதாகவும், இதுவொரு உலக சாதனை என்றும் மோடி கும்பல் தம்பட்டம் அடித்தபொழுது, ரகுராம் ராஜன், ‘‘குருடர்கள் தேசத்தில் ஒற்றைக் கண் உள்ளவன்தான் அரசன்’’ என நக்கலடித்து, மோடி கும்பலின் ஓட்டாண்டித்தனத்தை அம்பலப்படுத்தினார்.

இதுவொரு பொருளாதாரப் புள்ளிவிவர மோசடி எனப் பல பொருளாதார நிபுணர்கள் மோடி அரசின் பித்தலாட்டத்தனத்தை அம்பலப்படுத்தியபொழுது, ரகுராம் ராஜன், ‘‘தனியொரு மனிதனின் வருமானத்தை எடுத்துக் கொண்டால், இந்தியா இன்னமும் உலகின் ஏழை நாடுகளில் ஒன்றாக இருப்பதை உணர வேண்டும்’’ என்றார்.

சாட்டையடி போல விழுந்த ரகுராம் ராஜனின் நக்கலால் ஆத்திரப்பட்ட அருண் ஜெட்லியும், நிர்மலா சீதாராமனும், அவர் எல்லை மீறிப் பேசுவதாக எச்சரித்தபொழுது, ராஜன், ‘‘எனது வார்த்தைகளால் பார்வையற்றவர்கள் மனது புண்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்’’ எனக் கூறி, பார்ப்பன பாசிச திமிர் பிடித்த ஆர்.எஸ்.எஸ். கும்பலை நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளினார்.

மோடியை வலிமையான தலைவர் என்றும், அவரது அரசு வலிமையான அரசு என்றும் பார்ப்பனக் கும்பல் கொண்டாடியபொழுது, ‘‘வலிமையான அரசுகள் மக்களுக்கு வளமையைத் தருவதில்லை’’ எனப் பதிலடி கொடுத்த ராஜன், அதற்கு இட்லரை உதாரணமாகக் காட்டி, ‘‘வலிமையான தலைவரான இட்லர் ஜெர்மனியைத் திறமையாகவும் உறுதியோடும் அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றதோடு, சட்டத்தின் ஆட்சிக்கும் தேர்தலுக்கும் முடிவு கட்டியதை’’ நினைவூட்டினார்.

ஸ்டார்ட்-அப் இந்தியா மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு சகிப்புத் தன்மையும், கருத்து முரண்பாடுகளும் அவசியம் எனக் குறிப்பிட்ட ராஜன், ''கருத்துக்களின் மோதலுக்கு இடம் இல்லையென்றால், பொருளாதாரம்கூடத் தேக்கம் அடைந்து விடும்'' எனக் கூறி, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இந்து மதவெறித்தனத்தை இலைமறை காயாகக் குத்திக் காட்டினார்.



சப்-பிரைம் நெருக்கடியையடுத்து, தமது வங்கிச் சேமிப்புகளைத் திரும்பப் பெறுவதற்காக இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரிலுள்ள வங்கி வாசலில் காத்து நிற்கும் பொதுமக்கள். (கோப்புப் படம்)

தரகு முதலாளிகள் வட்டியைக் குறைக்க வேண்டும் என விடாப்பிடியாக நிர்பந்தம் கொடுத்த பொழுது, ''நாங்கள் யாருக்கும் தீபாவளி போனசு வழங்குவதில்லை'' என அவர்களை வாரிய ராஜன், ''இந்திய முதலாளிகள் சவால்களை எதிர்கொள்வதில்லை. நல்ல காலங்களில் இலாபத்தை அறுவடை செய்து கொள்ளும் அவர்கள், மோசமான தருணங்களில் வங்கிகளால் தூக்கி விடப்படுகிறார்கள்'' என உண்மையை உடைத்து, அவர்களின் ஒட்டுண்ணித்தனத்தை நாறடித்தார்.

### பார்ப்பனக் கும்பலின் இரட்டை வேடம்

''அதிகார வர்க்கத்தை அரசியல் தலையீடின்றி, சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும். திராவிடக் கட்சிகள் அப்படி அனுமதிக்காததால்தான் தமிழகம் குட்டிச் சுவராகிவிட்டதாக'' அங்கலாய்த்துக் கொள்வதும் புலம்புவதும் பார்ப்பனக் கும்பலின் வழக்கம். அவர்களின் அளவுகோலின்படி ராஜன் அரசியல் தலையீட்டுக்கு அடிபணிய மறுத்தார்; சுதந்திரமாக முடிவுகளை எடுத்தார். ஆனால், பார்ப்பனக் கும்பலோ அப்படிச் செயல்பட்டவரை அநாகரிகமாகவும் பொறுக்கித்தனமாகவும் தாக்குகிறது. ராஜன் மட்டுமல்ல, தேர்தல் கமிசன், நீதிமன்றங்கள் போல அரசியல் தலையீடின்றிச் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட ரிசர்வ் வங்கியும்கூட, மோடி அரசின் கைப்பாவையாக, இந்தியத் தரகு முதலாளிகளின் எடுபிடியாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் அக்கும்பலின் உள்நோக்கம்.

குறிப்பாக, மைய அரசு மற்றும் ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த ஏழு அதிகாரிகளைக் கொண்ட கூட்டுக்கமிட்டிதான் நாட்டின் பணக் கொள்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் கொண்டதாக இயங்கி வருகிறது. எனினும், இக்கமிட்டி எடுக்கும் முடிவுகளை ரத்து செய்து அதிகாரம் ரிசர்வ் வங்கி கவர்னருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ராஜனைத் தனது வழிக்குக் கொண்டு வருவதில் மண்ணைக் கவ்விய மோடி கும்பல், ரிசர்வ் வங்கி கவர்னருக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த ரத்து அதிகாரத்தையே ரத்து செய்ய முயன்றது.

ராஜன் தனியார்மயத்தை ஆதரிக்கும் பொருளாதார நிபுணர்தான். அவர் விதிகளின்படி விளையாடச் சொன்னார். அவ்வளவே. பாசிஸ்டுகளின் அதிகாரத்திற்கு எதிராக நின்று, உண்மையைத் துணிந்து கூறினார். மிக முக்கியமாக பொதுத்துறை வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்புகளைக் காப்பதற்காக அவர் மோடி அரசை எதிர்த்து நின்றார். இவ்வாறு உண்மையைப் பேசுபவர்களையும், தம்மை எதிர்த்து நிற்பவர்களையும் பார்ப்பன பாசிசக் கும்பல் நேர்மையாகவோ, நாகரிகமாகவோ எதிர் கொண்டதில்லை என்பதற்கு நிகழ்கால வரலாற்றிலும், கடந்த கால வரலாற்றிலும் பல உதாரணங்கள் உண்டு.

ராஜன் ஆர்.எஸ்.எஸ். கும்பலிடம் தோற்றுப் போய் வெளியேறவில்லை. தரகு முதலாளிகளின் கொள்ளைக்கு ஏதுவாக வங்கிப் பெட்டகத்தைத் திறந்து வைப்பதே அந்தக் கும்பலின் நோக்கம் என்ற உண்மையை பொதுவெளியில் அம்பலமாக்கி, எச்சரித்து விட்டு பிறகுதான் முடிவை அறிவித்திருக்கிறார்.

''ராஜனைவிட வேறு திறமையான இந்தியர்கள் இல்லையா?'' எனக் கேள்வி எழுப்பி, அவரைவிடத் திறமையான, நாணயமான நிபுணரை ரிசர்வ் வங்கி கவர்னராக நியமிக்கப் போவது போல சீன் போட்டு வருகிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். ஆனால், மோடி ஆட்சியில் மத்தியப் பல்கலைக்கழகங்கள், கல்வி, கலாச்சார, வரலாற்று ஆய்வு நிறுவனங்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் பேர்வழிகளின் யோக்கியதையைப் பாரக்கும்போது, ரிசர்வ் வங்கியும், பொதுத்துறை வங்கிகளும் எத்தகைய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

● திப்பு

# நரேந்திர மோடியின் சவடால்களும் சலாம்களும்

அணுசக்தி விநியோகக் குழுமத்தில் இந்தியா சேர்க்கப்படுவதை இனி உலகில் எந்தவொரு சக்தியாலும் தடுக்க முடியாது எனச் சவடால் அடித்த மோடி அரசு, அதற்காக சீனாவின் காலில் விழுந்த காமெடியை கண்டு உலகமே சிரித்தது.

சென்னை-வடபழனியிலுள்ள கமலா திரையரங்குக்குப் போனால், காலஞ்சென்ற அத்திரையரங்கின் உரிமையாளர் பல்வேறு அரசியல் பிரமுகர்கள், பிரபலங்கள், நடிகர்-நடிகையுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டதை சுவரெங்கும் தொங்கவிட்டு, தன்னை அதிமுக்கியப் பிரமுகராக விளம்பரப்படுத்திக் கொண்டதை யாரும் பார்க்கலாம். அவருக்கும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு, ஏதோ சர்வதேசத் தலைவராகிவிட்டதைப் போல காட்டிக் கொள்ளும் பிரதமர் மோடிக்கும் வித்தியாசம் ஏதுமில்லை.

ராவ் பகதூர், திவான் பகதூர் - என தனது விசுவாசக் கைக்கூலிகளுக்கு அன்று வெள்ளைக்காரன் பட்டம் கொடுத்ததைப் போல, மோடி கும்பலின் சுயவிளம்பர அற்பத்தனத்தைப் புரிந்து கொண்ட அமெரிக்க வல்லரசும், மோடியை அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இணைந்த கூட்டத்தில் உரையாற்ற வைத்து, அதற்குப் பலத்த கைதட்டல் கொடுத்து வரவேற்று, மோடிக்குப் பிடித்த செல்ஃபியை பல அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருடன் நின்று எடுத்துக் கொள்ள வைத்துவிட்டு, காயலாங்கடைக்கு அனுப்ப வேண்டிய தனது 6 அணு உலைகளை ரூ.2.8 லட்சம் கோடிக்கு இந்தியாவின் தலையில் கட்டியுள்ளது. இதற்கு முன்னதாக, கடந்த ஏப்ரலில் அமெரிக்க இராணுவத்துறை செயலர் அஷ்டன் கார்ட்டர் இந்தியாவுக்கு வந்தபோது, இந்தியத் துறைமுகங்கள் மற்றும் இராணுவத் தளங்களை அமெரிக்க ராணுவம் பயன்படுத்திக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (LEMOA) போடப்பட்டுள்ளது.



அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் இணைய சீனா முட்டுக்கட்டைபோடுவதாகவும், எனவே சீனப் பொருட்களை இந்தியர்கள் புறக்கணிக்க வேண்டுமென்றும் டெல்லி - ஜந்தர்மந்தரில் இந்துசேனா நடத்தும் ஆர்ப்பாட்டம்.

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடக்கும் போதெல்லாம், பதவி முடிவடையும் சமயத்தில் அதிபராக உள்ளவர் சர்வதேச அளவில் சில ஒப்பந்தங்களைப் போட்டு சாதனை புரிந்துவிட்டதாகக் காட்டிக் கொள்வதென்பது வாடிக்கை. இதன்படியே ஒபாமாவும், "அமெரிக்காவின் முக்கியமான இராணுவக் கூட்டாளி" என்ற தகுதியை இந்தியாவுக்கு அளித்து, "21-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள உலகக் கூட்டாளிகள் -1" எனும் தலைப்பிட்ட இந்திய-அமெரிக்கக் கூட்டறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளார். ஒபாமாவின் இந்த அறிக்கை இன்னும் அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக, ஏவுகணைத் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டுக் கூட்டமைப்பில் (MTCR) இந்தியா உறுப்பு நாடாக இணையவும், அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் (NSG) இந்தியா இணைவதற்கும் அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

இவற்றைக் காட்டி, மோடியின் ஆட்சியில் இந்தியா, அமெரிக்காவின் முதன்மை ராணுவக் கூட்டாளியாகிவிட்டதைப் போலவும், அமெரிக்க வல்லரசு தனது அரசியல்-ராணுவக் கூட்டாளியான பாகிஸ்தானை முற்றாக ஓரங்கட்டிவிட்டதைப் போலவும், இனி பாகிஸ்தானும் சீனாவும் வாலாட்ட முயற்சித்தால், அவற்றை நசுக்கத் தயாராக உள்ளதைப் போலவும் உதார்விட்டு மோடி கம்

பெனி கூத்தாடியது. தன்னை துணிச்சலான பிரதமராகக் காட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் கடந்த ஏப்ரலில் இந்தியாவின் தர்மசாலாவில் சீன எதிர்ப்பாளர்கள் நடத்திய ஒரு கருத்தரங்கில் பங்கேற்க, சீனாவிலிருந்து பிரிவினை கோரும் உய்குர் பிராந்தியத்தின் தலைவர்களுள் ஒருவருக்கு மோடி அரசு விசா வழங்கி, சீனாவுக்குப் பதிலடி கொடுக்கத் துணிந்துவிட்டதாக மோடி கம்பெனி தண்டோரா போட்டது. பின்னர், விசா வழங்கிய மோடி அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து சீனா எச்சரிக்கை விடுத்ததும், நகரம் திரைப்படத்தில் உதார் விட்டு காலில் விழும் வடிவேலு காமெடியைப் போல, உடனே மோடி அந்தர் பல்டி அடித்து விசாவை ரத்து செய்துவிட்டார்.



சீன அதிபரை நேரில் சந்தித்து, அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் இந்தியாவை இணைக்க ஆதரவு தருமாறு கோரும் மோடி.

அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் (NSG) இந்தியா இணைவதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தாலும், அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் (NPT) கையெழுத்திட்டுள்ள நாடுகள் மட்டுமே அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் (NSG)உறுப்பினராக முடியும். ஆனால், இந்தியா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. மேலும், அனைத்து நாடுகளும் ஒருமித்து ஆதரவளித்தால் மட்டுமே இக்குழுவில் ஒரு நாடு உறுப்பினராக முடியும். இதனால், இக்குழுவில் இந்தியா உறுப்பினராக வாய்ப்பே இல்லாத போதிலும், அமெரிக்கா ஆதரவளித்து விட்டதால் இனி யாரும் தடுக்கவே முடியாது போலவும், இக்குழுவில் இணைவதன் மூலம் இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக அமெரிக்கா அங்கீகரித்துவிட்டதைப் போலவும், இது மோடியினுடைய வெளியுறவுக் கொள்கையின் வெற்றியாகவும் மோடி கும்பல் கூசாமல் புளுகியது. அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் (NSG) இந்தியாவை இணைக்க சாத்தியமேயில்லை என்று தெரிந்திருந்தபோதிலும், கோயபல்சு ஊடகங்களைக் கையில் போட்டுக் கொண்டு ஏதோ மகத்தான சாதனை புரிந்துவிட்டதைப் போல இந்த நாடகத்தைத் திறமையாக நடத்தியது.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் (NPT) ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாததைக் காட்டி, 48 நாடுகள் கொண்ட இந்தக் குழுவில் இந்தியாவை உறுப்பினராகச் சேர்ப்பதற்கு சீனா, நியூசிலாந்து, அயர்லாந்து உள்ளிட்ட சில நாடுகள் ஆட்சேபம் தெரிவித்தன. மேலும், இந்தியாவைச் சேர்ப்பதாக இருந்தால், இதேபோல விண்ணப்பித்துள்ள பாகிஸ்தானையும் சேர்க்க வேண்டுமென சீனா உள்ளிட்ட சில நாடுகள் கோருகின்றன. அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவில் (NSG) இந்தியா இணைவதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளதேயன்றி, இந்தியாவை அதில் உறுப்பினராக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக, மோடி அரசுதான் இக்குழுவிலுள்ள நாடுகளிடம் தன்னையும் உறுப்பினராக்கக் கெஞ்சிக் கொண்டிருந்தது. ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக அமெரிக்கா ஆதரவு கொடுத்தது என்பதைப் போலத்தான் இந்தக் காமெடியும் நடந்தது.

இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளர் ஜெய்சங்கர் சீனாவுக்குப் பறந்தார். ஆனால் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. உடனே தாஷ்கண்ட் நகரில் நடந்த ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்ற சீன அதிபரை நேரில் சந்தித்து சலாம் போட்டு, ஜூன் 23 அன்று தென்கொரியத் தலைநகர் சியோலில் நடக்கும் அணுசக்தி விநியோகிப்பாளர் குழுவின் கூட்டத்தில் இந்தியாவை இணைக்க ஆதரவு தருமாறு கெஞ்சினார்.

ஆனால் அக்கூட்டத்தில் இந்தியாவை உறுப்பினராக்கும் நிகழ்ச்சிநிரலே இல்லை. மேலும், சீனா உள்ளிட்ட 7 நாடுகள் இந்தியாவை இணைப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தன. இந்தியாவுடன் “பிரிக்” கூட்டமைப்பில் உள்ள பிரேசில்கூட இந்தியாவை ஆதரிக்கவில்லை. வாய்வழியாக ஆதரவு தெரிவித்த நாடுகளும் கூட்டத்தில் கைவிரித்துவிட்டன. ஆனாலும் குப்புற விழுந்தாலும்இன்னும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக, இக்குழுவில் இந்தியாவை உறுப்பினராகச் சேர்ப்பது குறித்து ஆலோசனை நடத்த இக்குழுவின் உயர்நிலைக் கூட்டம் இந்த ஆண்டின் இறுதியில் நடக்கப் போகிறது என்று மீண்டும் இந்தக் கோமாளிக் கூத்தை மோடி கும்பலும் கோயபல்சு ஊடகங்களும் நடத்திக் கொண்டிருக்கின்றன.

இந்த குழுவில் சேர மோடி அரசு முட்டிமோதிய கூத்தை காங்கிரசு, ஆம் ஆத்மி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் கேலி செய்து, இது மோடி அரசின் வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த மிகப் பெரிய தோல்வி என்று பரிகசிக்கின்றன. இதுவரை இந்தியா கண்டிராத அற்பத்தனமான சுயதம்பட்டக் கோமாளி என்று மோடிக்கு சிறப்பு விருது கொடுக்க வேண்டியது தான் இனி பாக்கியிருக்கிறது.

● குமார்

பத்திரிக்கை செய்தி

# நீதித்துறையின் அடாவடித்தனம்! வழக்கறிஞர்களின் போராட்டம்!

தான் மதிப்பிழந்து போவதைத் தடுக்க முடியாத நீதித்துறை, அதிலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியாக, அதற்கான பழியை வழக்கறிஞர்கள் மீது போட்டுத் தாக்குதலைத் தொடுத்திருக்கிறது.

**நீ**தித்துறை தானே முகங்கொடுக்க வேண்டிய, தீர்வு காணவேண்டிய பெறுப்புகள், கடமைகள் ஏராளமமாகக் குவிந்து கிடக்கன்றன. உச்சநீதி, உயர்நீதி மன்றங்களில் பலஆயிரம் வழக்குகள், கீழமை நீதி மன்றங்களில் பல இலட்சம் வழக்குகள் பல ஆண்டுகமாகத் தேங்கிக் கிடக்கின்றன. நீதிமன்றத் தீர்ப்புகளை, உத்தரவுகளை மத்திய-மாநில அதிகாரிகளும் ஆட்சியாளர்களும், பெரும் கார்ப்பரேட் முதலாளிகளும், இயற்கை வளக் கொள்ளையர்களும் அவர்களின் கிரிமினல் குற்றக் கும்பல்களும் சாதி,மத வெறியர்களும் மதிப்பதேயில்லை.

இந்த நிலையில் நீதித்துறையின் மீது காலனிய காலத்திலிருந்து கட்டி எழுப்பப்பட்டிருக்கும் கேள்வி கேட்கவே கூடாத புனிதத் தோற்றம் உடைந்து நொறுங்குகிறது. இதற்குக் காரணமும் பொறுப்பும் நீதித்துறைதான். ஆனால், தான் மதிப்பிழந்து போவதையும் தனது சரிவையும் தடுக்க முடியாத நீதித்துறை, அதிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியாக நீதிமன்ற (வளாகத்தின்) கண்ணியத்தையும் மாண்பையும் காக்கும் திருப்பணியை மேற்கொண்டுள்ளது. நீதித்துறையின் மாண்பும் கண்ணியமும் வழக்கறிஞர்களால்தான் கெட்டுப்போவதாகப் பழிபோட்டு, அவர்கள் மீது தாக்குதல் களைத் தொடுத்திருக்கிறார்கள்.

உச்சநீதி மன்றம் முதல் கீழமை நீதி மன்றங்கள் வரை எல்லா மட்டங்களிலும் நீதிபதிகளின் தகுதியற்ற நியமனங்கள், இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், கட்டைப் பஞ்சாயத்துகள், பாலியல் குற்றங்கள் நிரம்பி வழிகின்றன. சுய முரண்பாடுகள் நிறைந்த, சட்டத்துக்கு முரணாக, ஒருதலைப்பட்சமான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஓய்வுபெற்ற, பதவியிலுள்ள நீதிபதிகளே ஒப்புக் கொள்கிறார்கள். இப்போது வழக்கறிஞர்களுக்கு எதிராக, நீதிபதிகளுக்கு ஆதரவாக வரிந்துகட்டிக் கொண்டு வாதாடும் நீதிபதி சந்த்ருவே கிராணைட் கொள்ளையில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக நீதிபதிகள் தீர்ப்புகள் வழங்கியதையும் விசாரிக்கச் சொல்லவில்லையா? கிராணைட் கொள்ளைக் குற்றவாளிகளை விடுவித்த மேலூர் மாஜிஸ்ட்ரேட் இடைநீக்கம் செய்யப்பட்டதும் என்ன எழுதினார்? உயர்நீதி மன்றத்தின் மூன்று முரண்பட்ட தீர்ப்புகள் அடிப்படையிலேயேதான் அவ்வாறு செய்ததாக கூறினார்.

கிராணைட் மட்டுமல்ல; தாது மணல், ஆற்றுமணல் போன்ற இயற்கை வளக்கொள்ளை, சாதிவெறி ஆணவக் கொலைகள், முத்துக்குமாரசாமி மற்றும் விஷ்ணுபிரியா தற்கொலை போன்றவைகளில் நியாயமான விசாரணைக்கு முட்டுக்கட்டை போடும் தீர்ப்புகள்; ஆளுங் கட்சிக்கும் அரக்கும் எதிரான வழக்குகளில் (எம்.ஜி.ஆர். சமாதியில் இருப்பது இரட்டை இலை அல்ல, பறக்கும் குதிரைதான் என்று சொன்னது; சொத்துக்குவிப்பு உட்பட ஜெயலலிதாவுக்கு எதிரான பல வழக்குகளை அப்பட்டமாகவே சட்டவிரோதமாக இரத்து செய்தது; தேர்தல் குற்றவழக்குகளிலிருந்து அவரை விடுவித்தது; தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஜெயலலிதா படத்தை அரசு அலுவலகங்களில் வைப்பது சரியெனத் தீர்ப்புச் சொன்னது; மதுவிலக்கு அரசின் கொள்கை, அதில் தலையிட முடியதென ஒதுங்கிக் கொண்டது - இப்படிப் பலவற்றில்) ஒருதலைப்பட்சமாக ஜெயலலிதாவுக்கு சாதகமாக வழங்கிய தீர்ப்புகள்.

சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி தத்து, பெங்களூர் நீதிபதி குமாரசாமி போன்றவர்களின் செயல்பாடுகள் நீதிபதிகளை மதிக்கக் கூடியதாகவோ நடுநிலையாளர்

வழக்குரைஞர் உரிமத்தைப் பறிக்கும் அதிகாரத்தை நீதிபதிகளிடம் ஒப்படைக் கும் புதிய விதியைத் திரும்பப் பெறக் கோரி சேலம் வழக்குரைஞர்கள் சார்பில் சேலம் நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம்.



களாகவோ கருதக் கூடியதாக இல்லை. தமிழகத்தில் குற்றஞ்சாட்டி விசாரணைக்கு நிறுத்தப்படுவோரில் 70 விழுக்காடு விடுதலை செய்யப்படுகிறார்கள். கட்டைப் பஞ்சாயத்தும் கையூட்டுமே இதற்குக் காரணம். கீழமை நீதிமன்றங்களில் ஊழல் பெருகிவிட்டதாக சமீபத்தில் உயர்நீதி மன்ற நீதிபதியே புலம்பினார்.

நீதித்துறையின் மீதான இத்தகைய புகார்கள், குறைபாடுகளை பல ஆண்டுகளாக நீதிபதிகள் யபரிசீலனை செய்வதே கிடையாது. தங்கள் முதுகை அவர்கள் திரும்பிப் பார்ப்பதே கிடையாது. நீதிபதிகளை நீதிபதிகளே நியமித்துக் கொள்வார்கள், பதவி உயர்களையும் தாங்களே போட்டுக் கொள்வார்கள், தங்கள் மீதான குறைபாடுகள், புகார்களைத் தாங்களே விசாரித்துக் கொள்வார்கள், இவைபற்றி வேறுயாரும் தலையிடவோ, பேசவோ கூடாது என்கிறார்கள்.

இது மன்னராட்சியைவிட மோசமானதில்லையா? இது கொடூரமான சர்வாதிகாரமில்லையா? யார் இந்த அதிகாரத்தை நீதிபதிகளுக்குக் கொடுத்தது? நீதிபதிகள் தங்களுக்குத் தாங்களே புனிதர்களாக ஒளிவட்டம் போட்டுகொண்டு, அத்துமீறிய அதிகாரத்தைச் சுவீகரித்துக் கொண்டது. வெளிப்படைத்தன்மையும் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடும் இல்லாதது; ஒளிவு மறைவான செயல்பாடு கொண்டதாகவும் நீதிமன்ற அவமதிப்பு என்ற ஆயுதமும் எளிதில் பதவி நீக்கம் செய்யமுடியாத கவசமும் தரித்திருப்பதால் சர்வாதிகாரிகளாக நடந்து கொள்கிறார்ககள்.

அன்றடம் நீதித்துறையும் சட்டத்துறையும் இனைந்து செயல்பட வேண்டியிருக்கிறது. இதில் நீதித்துறையின் மீது வழக்கறிஞர்களுக்கு மதிப்பும் மரியாதையும் நம்பிக்கையும் நீதிபதிகளின் நடத்தை, செயல்பாடுகளால் ஏற்படுத்தப்படவேண்டியன. நீதிபதிகள்தாம் தமது தலைமைப் பண்புகளால் முன்னுதாரணமாகச்செயல்பட்டு வழக்கறிஞர்களிடையே கண்ணியமான, மதிக்கத்தக்க நல்லுவுறகளைப் பேணிக் கொள்ள வேண்டும். ஆனால், அவ்வாறில்லாத நீதிபதிகளின் மேற்கண்ட நடத்தைகள் அருகிலிருந்து அன்றாடம் காணும் வழக்கறிஞர்களிடையே நல்லுறவையும் பொது மக்களிடையே நீதித்துறையின் மீது கண்ணியத்தையும் ஏற்படுத்தக் கூடியவையாக இல்லை.

இருந்தாலும், தமது யநல சீரழிவுப் போக்குகளை மாற்றிக்கொள்ளாத நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மீது சர்வாதிகாரத் தாக்குகளை ஏவியிருக்கின்றனர். பதவி உயர்வைக் குறிவைத்து சமீபத்தில் ஆந்திராவுக்கு மாற்றல் வாங்கிக் கொண்டுபோன ஒரு நீதிபதி தனது பிரிவுபச்சார விருந்தில் பின்வறுமாறு பேசியிருக்கிறார்.

''நான் போர்க்களத்திலிருந்து ஓடிவிடவில்லை. தொலை தூர ஏவுகணைகளை வீசி எதிரி முகாம்களை முற்றிலுமாக அழிப்பதற்குத் தோதான தூரத்தை கணக்கிட்டு, அதற்குப் பொருத்தமான இடத்தில் நிலைகொள்ளவிருக்கிறேன். வெகுதூரம் போய்விடவில்லை. தலைமை நீதிபதி தொலை பேசியில் அழைத்தால் ஆஜராகும் தொலைவில்தான் இருக்கிறேன். இங்கிருந்து போன பின்னரும், இங்கே என்ன நடக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவனாக நான் இருப்பேன். கனவிலும் வந்து உங்களை அச்சுறுத்துவேன்.''



நீதித்துறை சர்வாதிகாரிகள்: சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல் (இடது) மற்றும் நீதிபதி ராமசுப்பிரமணியன்.

மாண்புமிகு என்றழைக்கப்படும் ஒரு நீதிபதி, நியாயத்துக்குப் போராடும் வழக்கறிஞர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் வகையில் இப்படி பேசியதும், தலைமை நீதிபதிக்கும் தனக்கும் உள்ள நெருக்கத்தைக்காட்டி மிரட்டும் அவரது சிறுமையையும், இப்போது வழக்கறிஞர்களுக்கான நடத்தை விதித் திருத்தம் என்ற பெயரில் வழக்கறிஞர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலையும் வேறுவேறானதாகக் கருதமுடியுமா?

குடித்துவிட்டு நீதிமன்றத்துக்கு வருவதும் வழக்கு விசாரணைகளில் ஈடுபடுவதும், கட்டைப் பஞ்சாயத்து செய்வதும் சில வழக்கறிஞர்கள் மட்டுமல்ல, நீதிபதிகளிடமும் காணப்படும் சீரழிவுகள் இல்லையா? அதனால் நீதித்துறையின் மாண்பும் கண்ணியமும் பாதிக்

நீதிமன்றத்தின் பாசிச அடக்குமுறையைக் கண்டித்து ஜூன் 27 அன்று மதுரையில் மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்திய ஆர்ப்பாட்டம்





நீதிமன்ற ஊழலுக்கு உதாரணமாக முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி ஹெச்.எல்.தத்து, ஜெயாவிற்குப் பிணை வழங்கிய விவகாரம் சந்தி சிரிக்கிறது.

கப்படாதா? இம்மாதிரியான தவறுகளுக்குத் தக்க விசாரணையின்றி நீதிபதிகளே தண்டிக்கலாம் என்றால், அதே தவறுகளுக்கு நீதிபதிகளைத் தண்டிப்பது யார்? அதற்காக உச்சநீதி மன்றத்துக்கே போனாலும், அவை பல ஆண்டுகளாகக் கிடப்பில்தானே போடப்பட்டுள்ளன? வழக்கறிஞர்கள் சிலரின் தவறுகளுக்காக அந்தச் சமூகம் முழுவதையும் தண்டிப்பது சரியா?

நீதிமன்ற அதிக்கிரமங்களையும் அநீதிகளையும் அநியாயங்களையும் அன்றாடம் அருகிலிருந்து அனுபவிப்பவர்கள் மற்றவர்களைவிட வழக்கறிஞர்கள். அவற்றின் சட்ட நுட்பங்களை அறிந்தவர்கள் வழக்கறிஞர்கள். ஆகவே, அவற்றுக்கும் வேறு சமூகப் பிரச்சனைகளுக்காகவும் போராட வேண்டிய கூடுதலான உரிமையும் கடமையும் கொண்டவர்கள் வழக்கறிஞர்கள். நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயோ வெளியோ எங்கும் பேசவோ போராடவோ கூடாது என்றால் வேறுயார், எங்கு போய் போராடுவார்கள்? ஆகவே, இது வழக்கறிஞர்கள் மீதான தாக்குதல் மட்டுமல்ல, அரசியல் ஜனநாயக உரிமைகளுக்காகப்போராடும் அனைத்துப் பிரிவு மக்கள் மீதான நீதிமன்றத்தின் பாசிசத் தாக்குதல். நீதிமன்ற பாசிசத்திற்கு எதிராக அனைவரும் ஒன்றுதிரளுவோம்! போராடுவோம்!

– மாநில ஒருங்கிணைப்புக் குழு,
**மக்கள் அதிகாரம்**, தமிழ்நாடு.

# அரசியல் கட்டமைப்பில் அதிகரித்துவரும் அராஜகம்! மக்கள் அதிகாரமே மாற்று!!

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் நடைபெறும் பலவகையான தில்லுமுல்லுகள் அரசியல் கட்டமைப்பு நெருக்கடி தீவிரமடைவதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. இதற்கான மாற்று, தேர்தல் சீர்திருத்தங்கள் அல்ல; மக்கள் தமது பிரச்சினைகளைத் தாமே தீர்வு காண்பதற்கான மக்கள் அதிகாரமே!

**தே**ர்தல்களை ஒருபோதும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையமே ஒப்புக்கொண்டு விட்டது. பணப்பட்டுவாடாவில் மட்டுமல்ல; வாக்காளர் சேர்க்கை, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு முதற்கொண்டு தேர்தல் செயற்போக்கின் எல்லாக் கூறுகளிலும் எந்த வகையிலான முறைகேடுகளையும் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது என்று தேர்தல் ஆணையமே கைவிரித்துவிட்டது. ஆனாலும், ஜனநாயகம் என்ற மெகா மோசடியை மக்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே அவர்கள் தேர்தல்கள் மீது இன்னமும் நம்பிக்கைகொள்ளும் வகையில் பல பொய்களைப் பரப்புகிறார்கள். தமிழ்நாட்டில்தான் தேர்தல் முறைகேடுகள் உச்சநிலையை எட்டியிருக்கிறது, மற்ற மாநிலங்களில் இந்த நிலை இல்லை என்று நம்பச் சொல்லுகிறார்கள். முக்கியமாக தேர்தல் ஆணையத்தின் தலைமையில் கார்ப்பரேட் ஊடகங்களும் அரசியல் விமர்சகர்கள் என்ற பெயரில் கூலி அறிவுஜீவிகளும் இந்தப் புளுகைப் பரப்புகிறார்கள்.

சாதி, மத அடிப்படையில் பிரச்சாரம், வாக்குச்சேகரிப்பு சட்டப்படியே தண்டணைக்குரிய தேர்தல் முறைகேடு இல்லையா? நீதிக் கட்சிக் காலத்திலேயே சாதியத் தேர்தல் முறைகேடு நடக்கவில்லையா? உத்தமர்கள் நேருவும் காமராஜ நாடாரும் மன்னர்கள், ஜமீன்தார்கள், பண்ணையார்களை வைத்து சாதியத் தேர்தல் முறைகேடுகளைச் செய்யவில்லையா? பா.ஜ.க. சிவசேனா கட்சிகளும் கூட்டணியும் சாதி, மதவெறியை அடிப்படையாகக் கொண்டவையில்லையா?

தேர்தல் ஆணையம் அம்மா ஆணையமாக நடந்து கொண்டதற்கு திருப்பூரில் பாதுகாக்கப்பட்ட கண்டெய்னர்களே சாட்சி.



ஆனால், இவை தேர்தல் முறைகேடுகள் என்று தடுக்கப்படவே இல்லை. பால் தாக்கரேயின் மதவெறிப் பிரச்சாரம் குற்றச் செயல் என்று அறிவித்த உச்ச நீதிமன்றமே அவரைத் தண்டிக்கவே இல்லை. சாதி, மத வெறிக் கலவரங்கள் நடக்காத, கொங்கு மண்டலம் போன்ற பகுதிகளிலெல்லாம் சாதி, மத ஆதிக்கம், கொடூரங்கள் இல்லை என்று கருத முடியுமா? எவ்வித எதிர்ப்பும் காட்டாது மக்கள் ஒடுங்கிக்கிடக்கிறார்கள் என்றுதான் பொருள். அதுபோலத்தான் சாதி, மத அடிப்படையில் மட்டுமல்லாது, பணப்பட்டுவடா உட்படப் பலவிதத் தேர்தல் முறைகேடுகளும் நாட்டில் எங்கும் நிறைந்திருக்கின்றன என்பதுதான் உண்மை! வடநாட்டின் பல மாநிலங்களில் தலித்துக்களும் இசுலாமியர்களும் வாக்குச்சாவடிக்குள் போகவே முடியாது; அடித்து விரட்டப்படுகிறார்கள். படித்த மேதாவிகள், ஒழுக்க சீலர்கள் நிறைந்த ஊடகங்கத்திற்கே இலஞ்சம் கொடுத்து செய்திக்குப் பணம் (Paid News) என்ற பிரச்சினை பூதாகரமாக வளர்ந்துவிட்ட நிலையில், எம்.எல்.ஏ., எம்.பி., களுக்கே ஓட்டுக்குப் பணம் என்றாகிவிட்ட நிலையில், வாக்காளர்களுக்கு ஓட்டுக்குப் பணம் போன்ற முறைகேடுகள் என்பது இங்கு மட்டுமே நடப்பது என்று புளுகித் தமிழன் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள். தேர்தலுக்கான பறக்குபடை, அதிகாரிகளின் திடீர் சாதனை, பலகோடி அளவு பணம் பறிணிதல் என்று தினமும் பரபரப்புக் காட்டுகிறார்கள். ஆனால், இக்குற்றங்களுக்காக எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள்; எவ்வளவு பேர் தண்டிக்கப்பட்டார்கள் என்று யாரும் கவனிப்பதில்லை. எல்லாம் வெறும் நாடகம்; ஜனநாயகம் என்ற மோசடி மக்ககளுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக நடத்தப்படுவன.



கரூர்-அய்யம்பாளையத்திலுள்ள அ.தி.மு.க. அன்புநாதனின் உதவியாளர் சுதர்சன் குடோனில் நடந்த கண்துடைப்பு ரெய்டு. (உள்ளே) அ.தி.மு.க.வின் பணப்பட்டுவாடா தளபதியாகச் செயல்பட்ட கரூர் அன்புநாதன்.

தோர்தல் நடத்துவதற்காக வழங்கப்பட்ட சிறப்பு அதிகாரங்கள் மக்கள் உரிமைகளைப் பறித்து ஒடுக்குவதற்கும் ஊடகங்களின் துணையோடு வெற்றுக் கெடுபிடிகள், பரபரப்பு எற்படுத்தவும் பயன்படுத்தப்பட்டன.

தேர்தல் முறைகேடுகள் எல்லாமும் தேர்தல் ஆணையம் உடபட அனைத்து அதிகார மையங்களுக்கும் தெரிந்தே, அவற்றின் உடந்தையோடுதாம் நடக்கின்றன. தேர்தலை நடத்துவது மட்டுதான் எமது வேலை; பணப்பட்டுவடா, பறிணிதல் உட்பட தேர்தல் முறைகேடுகள் பிரச்சினை களைக் கையாளுவதற்கான அதிகாரமும் ஆள்பலமும் கிடையாது. பிரச்சினைகள், புகார்கள் எதுவானாலும் கோர்ட்டுக்குப் போங்கள் என்று வேறுபக்கம் கைகாட்டுகிறது. தேர்தல் நிகழ்வுப்போக்குகள் தொடங்கிய பிறகு, எல்லாம் தேர்தல் ஆணையத்தின் கீழ் வந்து விடுகின்றன; கோர்ட் தலையிட முடியாது என்று நீதித்துறை கைவிரித்து விடுகிறது. ஆளுக்கு ஆள் கைகாட்டிவிட்டு நியாயம்கேட்டுப் போகிறவர்களை அலைக்கழித்து பொறுப்பைத் தட்டிக் கழிப்பதும், இறுதியில் நீதிநியாயத்துக்கு எதிராகவும் தமது ஆதாயத்துக்கும் ஏற்றவகையில் நடப்பதும் ஆதிகார வர்க்கத்துக்கு இயல்பானதுதான். அது சட்டத்தின், விதிமுறைகளின் சந்து பொந்துகளை எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறது. தில்லுமுல்லுகள் செய்வதும், பிடிபட்டால் அவற்றை மூடி மறைப்பதும் நழுவிக்கொள்வதும் தப்பித்துக்கொள்வதும் அதிகாரவர்க்கத்தின் கைவந்த கலை. நீதிமன்றமும் ஓர் அதிகாரவர்க்க அமைப்புதான். வெளிப்படைத் தன்மையும் பதில்சொல்ல வேண்டிய கடப்பாடும் இல்லாது, ஒளிவு மறைவான செயல்பாடுகள் கொண்டவர்கள்தான் இந்த அதிகார வர்க்கத்தினர். இவர்களின் உடந்தையோடுதான் ஓட்டுக் கட்சிகள் எல்லாத் தேர்தல் முறைகேடுகளையும் செய்கின்றன.

> படித்தமேதாவிகள் - ஒழுக்க சீலர்கள் நிறைந்த ஊடகத்திற்கே இலஞ்சம்கொடுத்து செய்திக்குப் பணம் (Paid News) என்ற பிரச்சினை பூதாகரமாக வளர்ந்துவிட்ட நிலையில், எம்.எல்.ஏ., எம்.பி.-க்களின் ஓட்டுக்கும் பணம் என்றாகிவிட்ட நிலையில், வாக்காளரின் ஓட்டுக்குப் பணம் என்ற முறைகேடு என்பது இங்கு மட்டுமே நடப்பதாகப் புளுகித் தமிழன் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள்.

தேர்தல் நிகழ்வுப்போக்குகள் தொடங்குவதற்கு முன்பாகவே பல லட்சம் போலி வாக்காளர்கள் சேர்க்கைக்கு எதிரான வழக்கிலேயே இரண்டுங்கெட்டான் தீர்ப்பு வழங்கி உயர்நீதிமன்றம், மழுப்பி, தேர்தல் தில்லுமுல்லுக்குப் பச்சைக்கொடி காட்




2014 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்பொழுது, உ.பி.யில் ராமர் கோவில் விவகாரத்தைக் கிளறிவிடும் நோக்கில், ராமர் உருவப்படத்தின் பின்னணியில் நடத்தப்பட்ட நரேந்திர மோடியின் பிரச்சாரக் கூட்டம்.


டியது. அப்போதிருந்து எத்தனை தேர்தல் தில்லுமுல்லுக்குப் புகார்கள். அத்தனையையும் அநீதி, அநியாய அடிப்படையில் சமாளித்து போலீசு, நீதிமன்ற, தேர்தல் ஆணைய அதிகார வர்க்கமும், மத்திய மாநில ஆளும் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து மீண்டுமொரு ஜனநாயகக் கூத்தை நடத்தி முடித்திருக்கின்றன. கடந்த ஐந்தாண்டுகளாக ஆளும் கட்சியின் கூட்டாளியாகவும் கையாளாகவும் செயல்பட்ட போலீசு மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள்தாம் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டார்கள். அதுபோன்று பறக்கும் படைகளும் கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டன. பல அதிகாரிகளுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் புகாரளித்தனர். கண்துடைப்பாக சிலர் மாற்றப்பட்டனர். ஆனால், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் செயலற்ற பொம்மைகளாக வைக்கப்பட்டு, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை அம்மாவின் விசுவாசிகள் கைப்பற்றிக்கொண்டு, ஆளுங்கட்சித் தொண்டர்களோடு கைகோர்த்துகொண்டு ஒரு தலைப்பட்சமாக வேலைசெய்தார்கள். வேட்பாளர் தேர்வு முதற்கொண்டு அம்மாவின் தேர்தல் பிரச்சார ஏற்பாடுகள், தொகுதிகளுக்குக் கோடிகோடியாக பணக் கடத்தல், பண விநியோகம் மற்றும் பணம்பட்டுவடா வரை முன்னாள் இந்நாள் உளவுத்துறை அதிகாரிகள் ஆளுங்கட்சியின் செயற்குழுவைப் போன்று நிர்வாகப் பணிகளை செய்தனர்.

இவையும் வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை, பதவியேற்பு ஆகிய அனைத்தும் ஜனநாயகத்தின் போலித்தனத்தையே பறைசாற்றின. தேர்தல் நிகழ்வுப் போக்குகள் தொடங்கியதிலிருந்து ஆளுங்கட்சி அரங்கேற்றிய கிரிமினல் பெறுக்கி அரசியல் அராஜகங்கள், தேர்தல் முறைகேடுகள், கரூர் அன்புநாதன் வீடு-கிடங்குகள், எழும்பூர் சகோதரர்கள் அறைகள், பொள்ளாச்சி மருத்துவர் மாளிகைகள், திருப்பூரில் மூன்று கண்டெய்னர்கள் ஆகியவற்றில் கோடிகோடியாகக் கள்ளப்பணம் கைப்பற்றப்பட்டும் அரசியல் குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டதும், 30க்கும் மேற்பட்ட தொகுதிகளில் ஆயிரத்துக்கும் குறைவான வாக்கு வித்தியாசம், பத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளில் 100-க்கும் குறைவான வித்தியாசம் என்ற நிலையில் வாக்கு எண்ணிக்கை இழுபறியாக இருந்தபோதே ஜெயலலிதாவை பிரதமர் வாழ்த்தியது; அரசு அதிகாரிகள் ஜெயலலிதாவின் காலில் விழுந்து ஆசிபெறத் தயாராக வரிசை கட்டியது; எதிர்த்தரப்பு வெற்றிபெற்றுவிடும் என்ற நிலையில் இருந்த தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையையும் முடிவுகள் அறிவிப்பதையும் நிறுத்தி வைத்ததும் எதிர்த்தரப்பினர் போராட்டத்தில் குதித்த பிறகே முடிவை அறிவித்ததும் நடந்தன; தபால் வாக்குப்பதிவுகளில் தடை, வாக்குப் பதிவிலும் எண்ணிக்கையிலும் இயந்திரங்கள் பழுது, அழியும் மை, வோட்டர்களாக வெளிமாநில ஆட்கள் இவ்வளவு தடையையும் தாண்டி, ஆளுங்கட்சியுடன் நேரடியாகப் மோதிய தொகுதிகளின் மொத்த வாக்காளர்களில் கூடுதலானவர்கள் ஆளும் தரப்பை விட எதிர்த்தரப்பையே ஆதரித்தனர்; என்றாலும், ஒரு அரசியல் குடைக்கவிழ்ப்பைப்போல, தேர்தல் முடிவுகளை ஆளும்தரப்பு தனது பணபலமும் அதிகார பலமும் கொண்டு ஈாதித்துக் கொண்டது. அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலே கார்ப்பரேட் பிரச்ஈாரம், பண பலம் ஆகியவற்றை எதிர்த் தரப்பும் முன்னிருத்திய தால் கணிசமான அளவு வெற்றிபெற முடிந்தது.

நடந்து முடிந்த தேர்தல்களில், ஆளும்தரப்பு ஆட்சியைத் தக்கவைத்துகொண்டது, எதிர்த் தரப்பு அதிகார பூர்வத் தகுதியைப் பெற்றது என்றவகையில் இரண்டுமே வெற்றியைக் கொண்டாடுகின்றன. தனது இரகசியக் கூட்டுக் கட்சி மீண்டும் ஆட்சி யைப் பிடித்தது,

> நியாயமான வழிமுறைகளில் தேர்தல்களில் வெல்லவே முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போது தேர்தல்களில் போட்டி என்பது பணம், கார்ப்பரேட் பிரச்சாரம், அதிகார பலம் ஆகியவற்றை வைத்துச் சூதாடுவதாகி விட்டது. இதில் மக்களுக்குரியவை, மக்கள் நலனுக்கானவை என்று எதுவும் கிடையாது.

தனது எதிரிக் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் முயற்சி முறியடிக்கப் பட்டது என்றாலும் அது அதிகாரபூர்வ எதிர்க்கட்சி தகுதியைப்பெற் றது என்ற வகையில் ஆர்.எஸ்.எஸ்பா.ஜ.க.வுக்கு உவப்பும் கசப் பும் கலந்தே கிடைத்தது. திராவிடக் கட்சிகளை எதிர்ப்பது என்ற பெயரில் தமிழர் அடையாளங்களை அழிப்பது என்ற ஆர்.எஸ். எஸ்பா.ஜ.க. போர்த்தந்திரப் பணியை தலைமேற்கொண்டு செயல் பட்ட பிற கட்சிகள் (மக்கள் நலக் கூட்டணி, பா.ம.க; சீமான் கட்சி) எல்லாம் துடைத்தெறியப்பட்டு விட்டன.



இந்து மதவெறியைத் தூண்டிவிட்டுப் பிரச்சாரம் செய்வதையே தேர்தல் உத்தியாகக் கொண்டிருந்த சிவசேனா தலைவர் பால் தாக்கரேயை (படம்) உச்சநீதி மன்றம்கூடத் தண்டிக்கவில்லை.

இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், தமிழக வாக்காளர் களில் பெரும்பாலும் அரசியல் விழிப்புணர்வு பெறவில்லை என் பதை இந்தத் தேர்தல்கள் மீண்டும் உறுதி செய்துவிட்டன. வாக்க ளிப்பதற்கு முன்பு கடந்த ஐந்தாண்டுகளில் ஆட்சியாளர்கள் என் னென்ன செய்தார்கள்; அடுத்த ஐந்தாண்டுகளில் என்னென்ன செய் யப்போவதாக வாக்குறுதிகள் வழங்குகிறார்கள்; அவற்றை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்பதைக்கூட தொகுத்துப் பார்ப்ப தில்லை. அவ்வாறு வாக்காளர்கள் பார்க்காதவாறு ஊடகங்கள் பர பரப்பூட்டும் அன்றாடச் செய்திகளில் மூழ்கடிக்கிறார்கள்; இப்ப டிச் செய்வது ஊடகத்தாரின் விற்பனை உத்தியாகவும் ஆட்சியாளர் களுக்கு சேவைசெய்வதாகவும் இருக்கிறது.

மூவாயிரமாக இருந்த சாரயக் கடைகளை ஆறாயிரமாகத் திறந்த வர்தான் படிப்படியாக மதுவிலக்கென்றும், 500 கடைகளை மூடுவ தாகவும் நேரத்தைக் குறைப்பதாகவும் ஜெ. நாடகமாடுகிறார். சாரா யக்கள்ளச்சந்தையைநடத்துகிறார்;பால்விலை,மின்விலையைகிடு கிடுவென உயர்த்தியவர்தான் இப்போது (வோட்டுக்காக) குறைப்பதாக நாடகமாடுகிறார். ஊடகங்கள் இதை யெல்லாம் சொல்லுவதேயில்லை. இந்த வாக்குறு திகள் எல்லாம் ஏதோ நேற்றுத் தொடங்கிய கட்சி யின் செய்தி அறிவிப்புகள் போல அப்படியே வெளி யிடுகின்றன. சாராய போதையிலும் இலவச ஏக்கத் திலும் மூழ்கிக் கிடக்கும் வாக்காளர்களும் இதை நம்புகின்றனர். தேர்தல்களில் மட்டுமல்ல, மக் களை இவற்றில் மூழ்கடிப்பதிலும் இரண்டு கட்சி களுமே வெற்றிபெற்று விட்டன; அதைத் தடுக்கமுடி யாமற்போன மக்கள் தாமாகவே தோல்வியைத் தழு விக் கொண்டார்கள்.

மீண்டும் மக்கள் விரோத பொறுக்கி அரசியல் கிரி மினல் குற்றக் கும்பல் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண் டிருப்பது, நிலவும் சட்டமன்ற-நாடாளுமன்ற ஜனநா யகத் தேர்தல் அரசியல் வரம்புக்குள்ளேயே ஆட்சி மாற்றத்தைச் செய்துவிட முடியும் என்று நம்பிய கட்சி களின்அணிகளுக்குத்தேர்தல்முடிவுகள்அதிர்ச்சிஅலை களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆட்சியைப் பிடித்து விட முடியும் என்று நம்பியிருந்த எதிர்க்கட்சியே கூடத் திகைத்து நிற்கிறது. ஆளுங்கட்சியின் தேர்தல் தில்லு முல்லுகளையும் முறைகேடுகளையும் சவால்களையும் எதிர்கொள்ள முடியாமல் ஏற்கெனவே இடைத்தேர் தல்களைப் புறக்கணித்தபோதிலும், மாநிலந் தழுவிய பொதுத் தேர்தல்களில் அப்படி நடக்காது என்று நம் பின. ஆனால், ஆளுங்கட்சியின் தேர்தல் தில்லுமுல்லு களும் முறைகேடுகளும் உச்சத்தை எட்டின. இனி என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி எழுந்துள் ளது. சாதாரணமான, நியாயமான வழிமுறைகளில் தேர் தல்களில் வெல்லவே முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. இப்போது தேர்தல்களில் போட்டி என்பது கட்சிகளிடையே, வேட்பாளர்களியே, தேர்தல் அறிக் கைகளிடையே இல்லை. யார், எவ்வளவு பணம், கார்ப் பரேட் பிரச்சாரம், அதிகாரபலம் ஆகியவற்றை வைத் துச் சூதாடுவதாகி விட்டது. இதில் மக்களுக்குரியவை, மக்கள் நலனுக்கானவை என்று எதுவும் கிடையாது.

இதெல்லாம் மக்கள் அதிகாரம் கொள்கை அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளவாறு தற்போதைய அரசியல் கட் டமைப்பு நெருக்கடியின் ஒரு பகுதியாக நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல் கட்டமைப்பில் அதிகரித்து வரும் அராஜகம், நெருக்கடியைக் குறிக்கின்றன. ஆகவே, நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல் கட்டமைப்புக்கு வெளியே மக்களே தங்கள் பிரச்சினைகளுக்குத் தாங் களே தீர்வு காண்பதற்கான மக்கள் அதிகாரத்தை நிறு விக்கொள்ள வேண்டும். ●

## பிழைதிருத்தம்

கடந்த (ஜூன் 2016) இதழில் பக்.14-இல் உள்ள படக் குறிப்பில், பென்னாகரம் தொகுதியில் போட்டியிட்ட அன்புமணி ராமதாஸ் டெபாசிட்டை இழந்து தோற் றுப் போனதாக, தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவறு என்பதை அப்பகுதியைச் சேர்ந்த வாச கர்கள் பலரும் சுட்டிக் காட்டி எமக்கு கடிதம் எழுதியுள்ளனர். எமது கவனக்குறைவால் ஏற்பட்ட இப்பிழைக்கு சுயவிமர்சனம் ஏற்றுக்கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

# சட்டமன்றத் தேர்தல்களில் போலி கம்யூனிஸ்டுகளின் தோல்வி: கட்டெறும்பானது கழுதை!

நாடாளுமன்றத்தைப் புரட்சிக்குப் பயன்படுத்தப் போவதாகச் சவடால் அடித்த போலி கம்யூனிஸ்டு கட்சிகள், இன்று மற்ற ஓட்டுக்கட்சிகளாலும், மக்களாலும் சீந்துவாரின்றி ஓரங்கட்டுப்பட்டு விட்டன.


**த**மிழகத்தில் மூன்றாவது அணி என்ற பெயரில் அழைக்கப்பட்ட மக்கள் நலக் கூட்டணி மற்றும் விஜயகாந்த் கட்சி, வாசன் கட்சி ஆகியன இணைந்த கூட்டணியானது, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அவமானகரமான முறையில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, போலி கம்யூனிஸ்டுகள் இத்தேர்தலில் வெறும் 0.8 சதவீத வாக்குகளைப் பெற்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டார்கள். வாழ்ந்து கெட்ட குடும்பத்தைப் பார்த்து அனுதாபப்படுவதைப் போல போலி கம்யூனிஸ்டுகளின் இந்தக் கேவலமான தேர்தல் தோல்வியையும் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து போயுள்ளதையும் கண்டு முதலாளித்துவ பத்திரிகையாளர்கள் உள்ளிட்டு பலரும் பரிதாபப்பட்டு அங்கலாய்ப்பதோடு, ஆலோசனைகளையும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் போலி கம்யூனிஸ்டுகளோ, தே.மு.தி.க.- மக்கள்நலக் கூட்டணியின் செயல்திட்டங்களை மக்களிடையே கொண்டுசெல்ல போதுமான அவகாசம் இல்லாததால்தான், தமிழக சட்டமன்றத் தேர்தலில் எங்கள் கூட்டணிக்குத் தோல்வி ஏற்பட்டது என்று நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாக்கு என்பது போல சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் இரு பெரும் கட்சிகளும் ஊழல் கட்சிகள் என்று சாடுவதைத் தவிர, தமிழக மக்கள் தமக்கும் தமது கூட்டணிக்கும் ஏன் வாக்களிக்க வேண்டுமென்பதற்கான மாற்றுத் திட்டத்தை இப்போலி கம்யூனிஸ்டுகளால் முன்வைக்க முடியவில்லை. எங்களது கூட்டணித் தலைவர்கள் மீது எவ்வித ஊழல் குற்றச்சாட்டுகளும் இல்லை என்று கூறுவதுதான் மாற்று அணிக்கான தகுதியா? இது ஒரு தகுதி என்றால் ஆட்சிக்கு வராதவர்கள் எல்லோருமே ஊழலற்றவர்கள்தான்.




தேர்தல் ஆணையம் என்பது ஜெ. கும்பலின் எடுபிடி என்று நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் இதர எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணித்தபோது, ஜெ.யின் நிரந்தர விசுவாசியான தா.பாண்டியனின் வலது கம்யூனிஸ்டு கட்சி, ஜனநாயகத்தைக் காப்பது என்ற பெயரால் அங்கே போட்டியிட்டது. இப்போது நாங்கள்தான் உண்மையான மாற்று என்றால், அதை மக்கள் நம்புவார்களா? இத்தனை காலமும் தி.மு.க.- அ.தி.மு.க. என்று மாறிமாறி கூட்டணி வைத்துவிட்டு, இரண்டு பேருமே ஊழல் கட்சிகள் என்று இப்போதுதான் கண்டுபிடித்ததைப் போல போலி கம்யூனிஸ்டுகள் சொன்னால், அதைப் பார்த்து மக்கள் சிரிக்க மாட்டார்களா? எல்லாவற்றுக்கும் மேலாக, வலது கம்யூனிஸ்டு கட்சி சார்பில் தளி ராமச்சந்திரனை வேட்பாளராக நிறுத்திவிட்டு ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்றால், அதை மக்கள் நம்புவார்களா?

தமிழகத் தேர்தலில் கண்டெய்னர் விவகாரம் சந்தி சிரித்தபோது சி.பி.எம். கட்சி வாயே திறக்கவில்லை. கோடிக்கணக்கான ரொக்கப் பணத்துடன் ஒரு கண்டெய்னர் வெளியில் போகும்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைப் பற்றிய விவரங்களைக்கூட சி.பி.எம். கட்சியின் வங்கி ஊழியர் சங்கம் மக்களிடம் முன்வைக்கவில்லை. அதற்கு முன்னதாக சிறுதா




வூர் கண்டெய்னர் விவகாரம் அம்பலமானபோது, “சிறுதாவூர் பங்களாவில் ஜெயலலிதா பணம் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறுபவர்கள், அதைப் பறிமுதல் செய்து தேர்தல் ஆணையத்திடம் கொடுக்க வேண்டியதுதானே! அப்படி அவர்கள் 5 கோடி பிடித்தார்கள் என்றால், அதில் ஒரு கோடியை கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் நன்கொடையாகக் கொடுத்துவிட்டு ரசீது பெற்றுச் செல்லட்டும்” என்று செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கும் அளவுக்கு வலது கம்யூனிஸ்டுத் தலைவர் தா.பாண்டியனின் ஜெ. விசுவாசம் கரை புரண்டது. அதனால்தான் தனது பதவியேற்பு விழாவில் அவருக்கு முன்வரிசையில் அம்மா இடம் ஒதுக்கினார். இப்படிப்பட்ட பேர்வழிகளைத் தலைவர்களாகக் கொண்ட போலி கம்யூனிஸ்டுகள் தமிழக சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் எதைச் சாதிக்கப் போகிறார்கள்?

தமிழகம் மட்டுமல்ல, 34 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த ‘இடதுசாரி’களின் கோட்டையாகச் சித்தரிக்கப்பட்ட மே.வங்கத்தில் 2011-இல் 62 இடங்களைப் பெற்ற போலி கம்யூனிஸ்டு கூட்டணி, இம்முறை 32 இடங்களை மட்டுமே பெற்று மீளமுடியாத தோல்வியைச் சந்தித்துள்ளது. இக்கூட்டணியின் வாக்கு சதவீதம் தற்போதைய சட்டமன்றத் தேர்தலில் 24 சதவீதமாகத் தேய்ந்து விட்டது. இன்று மே.வங்கத்தில் 44 இடங்களைப் பெற்று பிரதான எதிர்கட்சியாக காங்கிரசு மாறிவிட்டது. போலி கம்யூனிஸ்டுகளோ மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மே.வங்கத்தில் கடந்த ஐந்தாண்டுகளாக திரிணாமுல் காங்கிரசு குண்டர்கள் 200-க்கும் மேற்பட்ட இடதுசாரி கட்சிகளின் ஊழியர்களைப் படுகொலை செய்துள்ளார்கள் என்று கூறுகிறார்கள் சி.பி.எம். தலைவர்கள். எனில், இத்தனை ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளதைக் கண்டு மக்கள் அனுதாபப்பட்டு வாக்களித்திருக்க வேண்டுமே! ஆனால், முந்தைய தேர்தலைவிட இடதுசாரி கூட்டணிக்கு மேலும் வாக்குகள் சரிந்துகொண்டே போகிறதே! எந்தப் பெரிய கட்சியும் தேர்தல் கூட்டணி கட்ட முன்வராமல், தமிழகத்தில் ஒரு உதிரிக்கட்சி நிலைக்குத் தரம் தாழ்ந்து போய்விட்டதே! கேரளா, மே.வங்கம், திரிபுரா தவிர இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் தேர்தலில் தனித்து நின்று சொந்த செல்வாக்கில் ஒரு இடத்தில்கூட வெற்றிபெற முடியாத நிலைக்கு அக்கட்சி வீழ்ச்சியடையக் காரணம் என்ன?

இந்தியாவில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த சொந்தக் காலில் நின்று மக்களைத் திரட்டி ஒரு புரட்சியைச் சாதிக்கும் நோக்கத்தில் இப்போலி கம்யூனிஸ்டுகள் ஒருக்காலும் கட்சியைக் கட்டவேயில்லை. கம்யூனிசத்தின் அடிப்படைகளை முற்றாகக் கைகழுவிவிட்டு, நிலவுகின்ற அரசியலமைப்பு முறையைக் கட்டிக்காத்து, இன்னுமொரு ஓட்டுக் கட்சியாக செயல்படும் வகையில்தான் போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் திட்டமும் நடைமுறையும் இருந்து வருகிறது. எங்களது பாதை ரஷ்யப் பாதையுமல்ல, சீனப் பாதையுமல்ல; இது இந்தியப் பாதை என்றும், நமது மண்ணுக்கேற்ப மார்க்சியத்தை வளர்த்தெடுத்து படிப்படியாகத்தான் புரட்சியைச் சாதிக்க வேண்டும் என்றும் கூறிக் கொண்டு கம்யூனிசத்தின் அடிப்படைகளை முற்றாகக் கைகழுவியதோடு, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வழிகாட்டுதல்களையும் இப்போலி கம்யூனிஸ்டுகள் அறவே புறக்கணித்தனர்.

காந்தி - காங்கிரசுக்குள் முற்போக்குகளைத் தேடி ஆதரவளித்த இவர்கள், போலி சுதந்திரத்துக்குப் பிறகு நேருவை சோசலிஸ்டாகத் துதிபாடி ஆதரித்தனர். அதன் பிறகு அன்றைய சோவியத் ஒன்றியத்தின் அணியிலிருந்த இந்திரா காந்தியின் வெளிநாட்டுக் கொள்கை முற்போக்கானது, உள்நாட்டுக் கொள்கைதான் பிற்போக்கானது என்று விமர்சனத்துடன் ஆதரவளித்தனர். அதைத் தொடர்ந்து, முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவக் கட்சிகளுடன் சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணி, அதனுடன் எல்லா இடதுசாரி சக்திகளையும் இணைத்து இடதுசாரி ஜனநாயக முன்னணி; பிறகு அதையே புரட்சிகர மக்கள் ஜனநாயக முன்னணியாக மாற்றி புரட்சியைச் சாதிப்பது என்ற திட்டத்துடன் எல்லா ஓட்டுக் கட்சிகளிலும் முற்போக்கைத் தேடிக் கூட்டணி கட்டி சட்டமன்ற - நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டனர்.

நக்சல்பாரி இயக்கம் தீவிரவாதப் பாதையில் செல்கிறது; இது இந்திய மண்ணின் யதார்த்த நிலைமைக்குப் பொருந்தாத பாதை; நாடாளுமன்றத்தின் மீது மக்களுக்குப் பிரமை உள்ளது; எனவே தற்போதைக்கு நடைமுறைக்குச் சாத்தியமான நாடாளுமன்றப் பாதையில் சென்று, படிப்படியாக அதை அம்பலப்படுத்தி புரட்சியைச் சாதிக்கப் போவதாகக் கூறினார்கள். ஆனால் இந்தப் ‘புரட்சிப் பாதை’யில் இக்




கட்சிகள் பயணப்பட்டு சாதித்தது என்ன? நாடாளு மன்றப் பாதையில் சென்று எதையும் சாதிக்க முடியாது என்பதற்கு அவர்களே சாட்சியமாகிப் போனார்கள். சட்டமன்ற - நாடாளுமன்றப் பாதை எனும் சட்டகத்தில் சிக்கிக் கொண்டுவிட்ட பிறகு, நாயினும் தரம் தாழ்ந்து போவதைத் தவிர வேறு வழியுமில்லாமல் போய் அக்கட்சிகளும் செல்லாக் காசாகிவிட்டன.

இதே நாடாளுமன்றப் பாதையில் செல்லும் பிற ஓட்டுக் கட்சிகள்கூட தமது சமூக ஆதரவை ஏதாவதொரு வகையில் தக்கவைத்துக் கொள்ளும்போது, இக்கட்சிகளால் தமது சமூக ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ளக்கூட முடிவதில்லை. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் ஆளும் வர்க்கங்களின் மறுகாலனியாதிக்கக் கொள்கைக்கு எதிரான மாற்றுக் கொள்கையோ, திட்டங்களோ இப்போலி கம்யூனிஸ்டு கட்சிகளிடம் இல்லை. இதே கொள்கைகளை 'மனிதமுகம்' கொண்டதாக, மக்களைக் கடுமையாகப் பாதிக்காத வகையில் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் போலி கம்யூனிஸ்டுகள் கூறும் மாற்றுக் கொள்கை. இந்த 'மனிதமுகம்' என்பது, மே.வங்கத்தின் சிங்கூர் - நந்திகிராமத்தில் போராடிய மக்கள் மீது பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்குவதுதான் என்று சந்திசிரித்துப் போய்விட்டது.

போலி கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கங்கள் தோற்றத்தில் பெரியதாக இருந்தாலும், பொருளாதாரவாத அடிப்படையில் கட்டப்பட்ட அச்சங்கங்களின் பலம் தேர்தலில் ஓட்டுக்களாக மாறுவதில்லை. அரசியல் பிரச்சினைகளில் தலையிட்டு அரசியல் போராட்டங்களை நடத்த முன்வராத இப்பொருளாதாரவாத செக்குமாட்டுத்தனமும் சந்தர்ப்பவாத தேர்தல் கூட்டணியும் அவர்களது கடந்தகால செல்வாக்கையும் அரித்துத் தின்றுவிட்டது. அவர்களது வர்க்கப் போராட்ட அமைப்புகளும் செயலற்று முடங்கிப்போய்விட்டன. சட்டமன்ற - நாடாளுமன்றத்தில் ஒரு சில சீட்டுக்களைப் பெற்று அரசு சன்மானங்களையும் சலுகைகளையும் பொறுக்கித் தின்பது, தமது பதவிகளைக் காட்டி அரசு அலுவலகம், போலீசு நிலையம், தொழிற்சங்கங்களில் புரோக்கர் வேலை செய்து தொழில் அமைதியைக் காத்து ஆதாயமடைவது என்பதுதான் அவர்களின் அன்றாட நடைமுறையாகிப் போய்விட்டது. இதுவும் போதாதென்று இதர ஆளும் வர்க்கக் கட்சிகளைப் போலவே இப்போலி கம்யூனிஸ்டு கட்சிகளும் ஊழல் - மோசடிகளில் ஈடுபட்டு பிழைப்புவாதிகளையும் புரோக்கர்களையும் கொண்ட கோடீசுவரக் கட்சிகளாக மாறிவிட்டன.

தமது சுய அழிவுப்பாதையில் பீடுநடை போட்டுக் கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டு கட்சிகள் தொலைக்காட்சி ஸ்டுடியோக்களில்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதை வைத்துதான் தாங்களும் ஒரு கட்சி என்று இவர்களால் விளம்பரப் படுத்திக் கொள்ள முடிகிறது. இதுவும் எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்பதுதான் நமக்குத் தெரியவில்லை.

●

### கொசுறு

**அ**ண்மையில் தே.மு.தி.க.வின் 14 மாவட்டச் செயலாளர்கள், விஜயகாந்துக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அக்கடிதம், தே.மு.தி.க.வின் முக்கிய நிர்வாகிகள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. "2005 முதல் 2016 வரை கட்சி நிதி, நன்கொடை, தேர்தல் நிதி, வேட்பாளர் கட்டணம் - என 500 கோடி ரூபாய்க்கு மேல் கிடைத்த பணம் என்னவானது? கட்சிக்கு வரும் நன்கொடைகளை டிரஸ்ட் பெயரில் வாங்கினீர்கள். அந்த டிரஸ்டில் இருப்பது விஜயகாந்த், பிரேமலதா, மச்சான் சுதீஷ் ஆகிய மூன்று பேர் மட்டும்தான்" என்று அம்பலப்படுத்தும் இந்தக் கடிதம் இப்போது ஊடகங்களில் பரபரப்பாகியுள்ளது.

இப்பேர்ப்பட்ட விஜயகாந்தைத்தான் கறைபடியாத கரம் என்று விளம்பரப்படுத்தி, இவரை முதலமைச்சராக்கி ஊழலற்ற ஆட்சி நடத்தப்போவதாகப் போலி கம்யூனிஸ்டுகள் கதையளந்தார்கள். இதை நம்பி தமிழக மக்கள் வாக்களித்து, தப்பித் தவறி விஜயகாந்த் வெற்றி பெற்று முதலமைச்சராகியிருந்தால், விஜயகாந்தும் பிரேமலதாவும் மச்சான் சுதீஷும் தமிழ்நாட்டையே தமது குடும்ப டிரஸ்டுக்குப் பட்டா போட்டுக் கொண்டிருப்பார்கள். முத்தரசனும் ராமகிருஷ்ணனும் அதற்கு சாட்சி கையெழுத்து போட்டிருப்பார்கள். நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது.

● மனோகரன்

# குல்பர்க் சொசைட்டி தீர்ப்பு:

# பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்...

குல்பர்க் சொசைட்டி படுகொலையில் நரேந்திர மோடிக்குப் பங்கில்லை என நீதிமன்றம் ஒத்துக் கொண்டது முதல் அநீதி என்றால், தற்பொழுது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு இரண்டாவது அநீதியாகும்.

**ப**தினான்கு ஆண்டுகளுக்கு முன்பு குஜராத்தில் நடந்த முசுலீம் இனப் படுகொலை வழக்குகளில் ஒன்றான குல்பர்க் சொசைட்டி வழக்கில் சிறப்பு நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு, நீதி வழங்கப்பட்டதைப் போன்ற தோற்றத்தைத்தான் தந்திருக்கிறது. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சங்கப் பரிவார அமைப்புகளைச் சேர்ந்த 66 இந்து மதவெறியர்களுள் 36 பேர் விடுவிக்கப்பட்டு, 24 பேர் மட்டுமே குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த 24 பேரிலும் 11 பேர் மட்டுமே கொலைக் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. மீதி 13 பேர் மீது தீ வைத்தல், கலவரத்தில் ஈடுபடுதல், சட்டவிரோதமாகக் கூடி கலாட்டா செய்தல் என ஒப்புக்குச் சப்பாணியான, மிகக் குறைவான தண்டனை அளிக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் மட்டுமே நிரூபிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு, அவர்களுள் 12 பேருக்கு ஏழாண்டு சிறைத் தண்டனையும், ஒருவருக்கு பத்து ஆண்டு சிறை தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்து மதவெறி பாசிச குற்றக் கும்பலுக்கு அதீதமான கருணையைக் காட்டியிருக்கும் இத்தீர்ப்பு இன்னும் ஒருபடி மேலேபோய் இவ்வழக்கில் குற்றவாளிகள் சதித் திட்டம் தீட்டியதற்கோ, பாலியல் வன்முறையில் ஈடுபட்டதற்கோ ஆதாரமில்லை என்று கூறி, அக்குற்றச்சாட்டுக்களை முழுமையாக ரத்து செய்துவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், சங்கப் பரிவாரக் கும்பல் குல்பர்க் சொசைட்டியில் குடியிருந்து வந்த முசுலீம்கள் மீது திட்டமிட்டு நடத்திய பயங்கரவாதத் தாக்குதலை, ஏதோவொரு சில வன் முறையாளர்களின் திடீர்த் தாக்குதலாகச் சுருக்கிவிட்டது, இத்தீர்ப்பு.

ஆள் அரவமற்று, பேய்க் குடியிருப்பாக மாறி நிற்கும் குல்பர்க் சொசைட்டி. (கோப்புப் படம்)




ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவார இந்து மதவெறி அமைப்புகளும் நரேந்திர மோடி அரசும் இணைந்து குஜராத்தில் நடத்திய முசுலீம் படுகொலை எத்துணை கொடூரமாகவும், வக்கிரமாகவும் நடத்தப்பட்டது என்பதற்கு குல்பர்க் சொசைட்டி மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒரு வகைமாதிரி. குஜராத் தலைநகர் அகமதாபாத் நகரில், ஆதிக்க சாதி இந்துக்கள் அதிகமாக வாழும் சமன்புரா பகுதியில் தனித்தீவாக அமைந்திருந்த முசுலீம் குடியிருப்பான குல்பர்க் சொசைட்டி மீதான தாக்குதல், கோத்ரா சம்பவம் நடந்த மறுநாள் பிப்ரவரி 28, 2002 காலையில் தொடங்கி மாலைவரை நீடித்தது. இத்தாக்குதலில் அக்குடியிருப்பில் இருந்த 18 வீடுகள் முற்றிலுமாகக் கொளுத்தப்பட்டதோடு, காங்கிரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஷான் ஜாஃப்ரி உள்ளிட்டு 35 பேர் உயிரோடு கொளுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். குறிப்பாக, இந்து மதவெறிக் கும்பலை எதிர்த்து நின்ற இஷான் ஜாஃப்ரி, அங்க அங்கமாக வெட்டிச் சிதைக்கப்பட்டு, எரித்துக் கொல்லப்பட்டார். இவர்களுக்கு அப்பால் அக்குடியிருப்பைச் சேர்ந்த 31 பேரின் கதி என்னவென்பது இன்றுவரை தெரியவில்லை. அவர்கள் உயிரோடு இருக்க வாய்ப்பே இல்லை என்பதே உண்மை. ஆனாலும், அவர்களின் உயிரற்ற உடல்கள்கூடக் கிடைத்துவிடாதபடி கொல்லப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டனர். கிட்டதட்ட 500 குடும்பங்கள் வசித்து வந்த அக்குடியிருப்பு, இன்று யாருமே வசிக்காத, எரிந்து போன, சிதிலமடைந்த கட்டிடங்கள் மட்டுமே எஞ்சி நிற்கும் பேய்க் குடியிருப்பாக மாறி நிற்கிறது.

இந்தத் தீர்ப்பு, இப்படுகொலை வழக்கில் பாதிக்கப்பட்ட முசுலீம் குடும்பங்களுக்கு மட்டுமல்ல; தனது மகனைப் பறிகொடுத்துவிட்டு, அவன் உயிரோடு இருக்கிறனா, இல்லையா என்பது





குல்பர்க் சொசைட்டி படுகொலையில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் தண்டிக்கக் கோரிப் போராடி வரும் இஷான் ஜாப்ரியின் மனைவி ஜாகியா ஜாப்ரி (இடது) மற்றும் வழக்குரைஞர் தீஸ்தா செதல்வாத்.

கூட நிச்சயமாகத் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ரூபா மோடி குடும்பத்துக்கும் இழைக்கப்பட்டிருக்கும் இரண்டாவது அநீதியாகும். முதல் அநீதியை, இவ்வழக்கை விசாரிக்க உச்சநீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு இழைத்தது.

ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரத்தைச் சேர்ந்த இந்து மதவெறி பயங்கரவாதிகள் குல்பர்க் சொசைட்டியைத் தாக்கத் தொடங்கியவுடனேயே, அக்குடியிருப்பைச் சேர்ந்த முசுலீம்களும், முசுலீம் அல்லாத ரூபா மோடியும் அவரது இரு குழந்தைகளும் அக்குடியிருப்பில் வசித்து வந்த இஷான் ஜாஃப்ரி வீட்டில் தஞ்சமடைந்தனர். முதல்வர் மோடியின் அலுவலகத்தையும் போலீசு அதிகாரிகளையும் தொலைபேசி வழியாகப் பலமுறை தொடர்பு கொண்டு, தங்களைக் காப்பாற்றுமாறு கோரினார் இஷான் ஜாஃப்ரி. தாக்குதல் நடந்த அன்று காலை தொடங்கி மதியம் வரை இஷான் ஜாஃப்ரி திரும்பத் திரும்ப தொடர்பு கொண்ட பிறகும், முதல்வர் அலுவலக அதிகாரிகளோ, போலீசு அதிகாரிகளோ அவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. இத்துணைக்கும் குல்பர்க் சொசைட்டி குடியிருப்புக்கு அருகாமையில், ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் அகமதாபாத் நகர போலீசு கமிசனர் அலுவலகம் இருந்தும், மோடி அரசும் அதிகார வர்க்கமும் தங்களைக் காப்பாற்றுமாறு கெஞ்சியவர்களை இந்து மதவெறிக் கும்பலின் கைகளில் சிக்கி சாகவிட்டனர்.

குஜராத்தில் நடந்த முசுலீம் இனப் படுகொலையில் மோடி அரசுதான் அடிக்கொள்ளியாக இருந்தது என்பது மட்டுமல்ல, அகமதாபாத்தின் குல்பர்க் சொசைட்டி, நரோடா பாட்டியா பகுதிகளில் நடந்த படுகொலைகளில் அவரது அரசிற்கு நேரடியான பங்கும் இருந்தது. நரோடா பாட்டியா படுகொலை வழக்கில் மோடி அரசில் அமைச்சராக இருந்த கோத்னானி தளபதியாகச் செயல்பட்டது நிரூபிக்கப்பட்டு, அவர் தண்டிக்கப்பட்டார். குல்பர்க் சொசைட்டி படுகொலையில் மோடி அரசின் பங்கை இஷான் ஜாப்ரியின் தொலைபேசி உரையாடல்கள் அம்பலப்படுத்தின. இந்த அடிப்படையில்தான் நரேந்திர மோடியையும், அவரது அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட 62 பேரையும் குல்பர்க் சொசைட்டி படுகொலை வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்க வேண்டும் எனக் கோரி வழக்கு தொடுத்தார், இஷான் ஜாப்ரியின் மனைவி ஜாகியா ஜாப்ரி. அவரது கோரிக்கையை குஜராத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உச்ச நீதிமன்றம் இந்தக் குற்றச்சாட்டை விசாரிக்குமாறு சிறப்புப் புலனாய்வுக் குழுவிற்கு உத்தரவிட்டது.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவரும் முன்னாள் சி.பி.ஐ. இயக்குநருமான ராகவன் நரேந்திர மோடியிடம் விசாரணை என்ற நாடகத்தை நடத்திவிட்டு, அவரைக் குற்றவாளியாக்கக்கூடிய சாட்சியங்கள் எதுவுமில்லை என அறிக்கை அளித்ததோடு மட்டுமின்றி, "இஷான் ஜாப்ரி துப்பாக்கியால் சுட்டதையடுத்துதான், கலவரக் கும்பல் ஆத்திரமடைந்து அவரைக் கொன்று போட்டதாக"க் குறிப்பிட்டு,குல்பர்க் சொசைட்டி படுகொலை வழக்கை நீர்த்துப் போகச் செய்தார்.

விசாரணையைக் கண்காணித்து வருவதாகக் கூறிய உச்ச நீதிமன்றமோ, நரேந்திர மோடியைக் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்த ராகவனின் அறிக்கையைப் பரிசீலிக்க வேண்டிய தனது பொறுப்பைக் கை கழுவிவிட்டு, அதனை குஜராத் மாநில கீழமை நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது. குஜராத் பெருநகர குற்றவியல் நடுவர் மன்றம் ராகவனின் அறிக்கையை ஏற்றுக் கொண்டு, நரேந்திர மோடி மீது ஜாகியா ஜாப்ரி சுமத்திய குற்றச்சாட்டுகளைத் தள்ளுபடி செய்தது.


நரேந்திர மோடி மட்டுமல்ல, அவரது அமைச்சர்கள் அதிகாரிகள் உள்ளிட்ட 62 பேரில் ஒருவர்கூட குல்பர்க் சொசைட்டி வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்படவில்லை. பா.ஜ.க.வைச் சேர்ந்த அகமதாபாத் நகர கவுன்சிலர் பிபின் படேல், விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த அதுல் வைத்யா உள்ளிட்ட இரண்டாம் மட்டத் தலைவர்களும், மேகானிநகர் போலீசு நிலையத்தில் இன்ஸ்பெக்டராக இருந்த கே.ஜி. எர்டா போன்ற அம்புகள் மட்டுமே இப்படுகொலை வழக்கில் முக்கிய குற்றவாளிகளாக நிறுத்தப்

குல்பர்க் சொசைட்டி படுகொலை வழக்கில் தொடர்புடைய மோடியையும் அவரது அதிகாரிகளையும் கொலைக் குற்றத்திலிருந்து விடுவித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் ஆர்.கே.ராகவன். (கோப்புப் படம்)



பட்டனர். இவர்களுள் பிபின் படேலையும் கே.ஜி.எர்டாவை யும் அப்பாவிகள் என நீதிமன்றம் கூறாததுதான் பாக்கி. அவர்கள் இருவரும் முழுமையாக விடு தலை செய்யப்பட்டுவிட, அதுல் வைத்யா மீது சுமத்தப்பட்டிருந்த கொலைக் குற்றச்சாட்டு நீதிமன் றத்தால் ரத்து செய்யப்பட்டிருக் கிறது. இவ்வழக்கில் நீதிமன்றத் தால் குற்றவாளியாக அறிவிக் கப்பட்டுள்ள கைலாஷ் குமார் தோபியை போலீசு இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறது.

“இருபதுக்கும் மேற்பட்ட பங்களாக்களையும், பத்துக்கும் மேற்பட்ட அடுக்குமாடிக் குடி யிருப்புகளையும் 500 குடும் பங்களையும் கொண்ட மிகப் பெரிய காலனியான குல்பர்க் சொசைட்டி மீது நாள் முழு வதும் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை, தீ வைப்பை, படு கொலைகளை வெறும் 24 பேர் மட்டுமே நடத்தியதாக நீதிமன் றம் தீர்ப்பளித்திருப்பது விந்தையாக இருக்கிறது” என இத்தீர்ப்பின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தியிருக் கிறார் இஷான் ஜாப்ரியின் மகன் தன்வீர் ஜாப்ரி.



அங்க அங்கமாகச் சிதைத்து, பின் எரித்துக் கொல்லப்பட்ட இஷான் ஜாப்ரி. (கோப்புப் படம்)

குஜராத் இனப் படுகொலை குறித்து இரகசியப் புலனாய்வு செய்து அம்பலப்படுத்திய “தெகல்கா” வார இதழின் முன்னாள் செய்தியாளர் ஆஷிஷ் கேதான், “இஷான் ஜாப்ரியைக் கொலை செய்ததில் தமக்குப் பங் கிருப்பதை என்னிடம் ஒத்துக் கொண்ட மூன்று பேரில் இரண்டு பேர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருப் பதை”ச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இவ்வழக்கில் சதிக் குற்றச்சாட்டை நிரூபிக்க சிறப் புப் புலனாய்வுக் குழு முயற்சி செய்யவேயில்லை எனக் குற்றஞ்சாட்டுகிறார், தீஸ்தா சேதல்வாத். குறிப்பாக, குல்பர்க் சொசைட்டி மீது தாக்குதல் நடந்த சமயத்தில் போலீசு அதிகாரிகளுக்கு இடையே தொலைபேசி வழி யாகவும், வயர்லெஸ் வழியாகவும் நடந்த உரையாடல் கள், தகவல் பரிமாற்றங்கள் மற்றும் அவர்கள் அந்தச் சமயத்தில் எங்கிருந்தார்கள், எங்கே போனார்கள் என்ற விவரங்களையெல்லாம் திரட்டி, சதிக் குற்றச்சாட்டை நிரூபிக்கும் ஆதாரங்களையும் சாட்சியங்களையும் சிறப்புப் புலனாய்வுக் குழு முன்வைக்கவேயில்லை. குறிப்பாக, இஷான் ஜாப்ரி மோடியின் முதலமைச்சர் அலுவலகம் தொடங்கி பல்வேறு போலீசு அதிகாரிகள் வரை தொடர்பு கொண்டதற்கான ஆதாரங்களைச் சேக ரிக்க முயலாமல், இஷான் ஜாப்ரியின் தொலைபேசி பதிவுகள் அழிக்கப்பட்டு விட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்தது, சிறப்புப் புலனாய்வுக் குழு என அம்பலப் படுத்தியிருக்கிறார், அவர்.

குல்பர்க் சொசைட்டிக்கு மிக அருகாமையில், ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் அமைந் துள்ள நரோடா பாட்டியாவில் நடந்த படுகொலை தாக்குதல் வழக்கில் சதி குற்றச்சாட்டு நிரூ பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கில் சதிக் குற்றச்சாட் டுக்கு ஆதாரமில்லை என நீதி மன்றம் கூறியிருப்பது முரண் பாடு மட்டுமல்ல; முக்கிய குற்ற வாளிகளைத் தப்ப வைக்கும் உள் நோக்கத்தோடு நீதிமன்றம் நடந் திருப்பதையும் அம்பலப்படுத்து கிறது.

குல்பர்க் சொசைட்டி வழக் கில் குற்றவாளிகளாக நிறுத்தப் பட்ட அனைவரும் தண்டிக்கப் பட்டுவிடக் கூடாது; தண்டிக்கப் படுபவர்களுக்கு மரண தண்ட னையைவிடக் குறைவான தண் டனை தரக்கூடிய விதத்தில் மட் டுமே தீர்ப்பு அமைய வேண்டும் என்ற நோக்கில்தான் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் புலனாய் வும், நீதிமன்றத்தின் விசாரணையும் நடந்துள்ளன என் பதைத்தான் இத்தீர்ப்பும் அறிவிக்கப்பட்டுள்ள தண்ட னைகளும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால், இப்படிபட்ட “பரந்த மனப்பான்மை”யை முசுலீம் தீவிரவாதத் தாக்குதல் வழக்குகளில் இந்திய நீதிமன்றங்கள் வெளிப்படுத்துவதில்லை. அப்சல் குரு வின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாதபோதும், தேசத்தின் மனசாட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக அவரது தூக்கு தண்டனையை உறுதி செய்தது உச்ச நீதி மன்றம். மும்பய் குண்டு வெடிப்பு வழக்கில் அப்ரூவ ராக மாறிய அப்பாவி யாகுப் மேமன் தூக்கில் தொடங் கவிடப்பட்டார். இந்தத் தண்டனைகளைக் கொண்டா டிய நகர்ப்புற நடுத்தர வர்க்கம், இந்து மதவெறி பயங் கரவாதிகள் சட்டப்படியே தப்ப வைக்கப்படுவதை எதிர்த்துக் கேள்வி கேட்க மறுக்கிறது.

“நீதிக்கான எனது போராட்டம் முடிவுக்கு வந்தி ருக்க வேண்டும்; ஆனால், இத்தீர்ப்பைப் பார்த்தவுடன் எனது போராட்டத்தைத் தொடருவது என முடிவு செய் திருக்கிறேன்” என்கிறார், வயதையும் மீறிய போர்க் குணத்துடன் ஜாகியா ஜாப்ரி.

நீதியை வழங்க வேண்டிய அரசே காவிமயமாகி, அநீதிக்கும் துரோகத்திற்குமான இடமாகிப் போய் விட்ட நிலையில், ஜாகியா ஜாப்ரி, தீஸ்தா செதல்வாட் போன்றோரின் துணிவுமிக்க போராட்டங்கள்தான் நம் பிக்கை ஒளிக்கீற்றுகளாக விளங்குகின்றன.

● செல்வம்

# ஜாட் கலவரம்:
# சாதி என்றொரு பெருந்தீமை!

**சாதி என்பது தன் இயல்பிலேயே ஒழுக்கமோ, நெறிகளோ இல்லாத ஒரு சமூக விரோத நிறுவனம் என்பதை அரியானாவில் பிற சாதியினர் மீது ஜாட் சாதிவெறியர்கள் நடத்திய தாக்குதல் காட்டியிருக்கிறது.**

அரியானா மாநிலத்தில் கடந்த பிப்ரவரி மாதம் ஜாட் சாதிவெறிக் கும்பல், பிற சாதியினரைக் குறிவைத்து நடத்திய தீ வைப்பு, சூறையாடல், கொள்ளை, பாலியல் வன்முறை உள்ளிட்ட வன்முறை வெறியாட்டம், சாதி என்பது எத்தகையதொரு பேரழிவு சக்தி என்பதையும், இந்த அட்டூழியங்கள் அனைத்தையும் நியாயப்படுத்தும் சுய சாதி பெருமிதம் மனித நாகரிகத்துக்கே எதிரானது என்பதையும் மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டியிருக்கிறது.

தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் எனக் கோரி ஜாட் சாதியினர் நடத்திய போராட்டம், தன்னெழுச்சியாக வன்முறை வடிவத்தை எடுத்துவிட்டதைப் போலச் சித்தரிப்பதெல்லாம் உண்மையை மூடிமறைப்பதாகும். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகவே, ஜாட் சாதியினர் கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் தங்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கக் கோரி போராட்டங்களை நடத்தி வருகிறார்கள் என்றபோதும், கடந்த பிப்ரவரி மாதம் அச்சாதியினர் நடத்திய வன்முறை வெறியாட்டத்தின் இலக்கு இட ஒதுக்கீடு சலுகை அல்ல. அதற்கும் மேலாக, அரியானா மாநிலத்தில் தமக்குள்ள சமூக, அரசியல் மேலாண்மையை உறுதிப்படுத்திக் கொள்வதுதான்.

அரியானா, பஞ்சாப், டெல்லி, உ.பி., இராசஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஜாட் சாதியினர் கணிசமான எண்ணிக்கையில் வசித்து வந்தாலும், அரியானாவில்தான் அவர்கள் மற்ற சாதியினரைவிட அதிக எண்ணிக்கையிலும், அடர்த்தியாகவும் வசித்து வருகின்றனர். அம்மாநிலத்தின் மொத்த வாக்காளர்களில் 27 சதவீதம் ஜாட் சாதியினராக இருப்பதோடு, 90 சட்டமன்றத் தொகுதிகள் கொண்ட அம்மாநிலத்தில் ஏறக்குறைய முப்பது தொகுதிகளின் வெற்றி வாய்ப்பைத் தீர்மானிக்கும் சக்தியாக ஜாட் சாதியினர்தான் உள்ளனர். 1966-இல் அம்மாநிலம் உருவாக்கப்பட்ட பிறகு, இதுவரை அம்மாநிலத்தை ஆண்ட பத்து முதலமைச்சர்களுள் ஏழு முதலமைச்சர்கள் ஜாட் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிலவுடமை வர்க்கமான ஜாட் சாதியினரிடம்தான் அம்மாநிலத்தின் நான்கில் மூன்று பகுதி விவசாய நிலங்கள் குவிந்திருப்பதாகவும்; அச்சாதியினரில் வெறும் 10 சதவீதம் பேர்தான் நிலமற்றவர்கள் என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஜாட் சாதியினரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து ஆராய்ந்த கே.சி.குப்தா கமிசன், "அம்மாநில அரசின் உயர் பதவிகளில் 17.82 சதவீதமும், கீழ்நிலைப் பதவிகளில் 40 முதல் 50 சதவீதமும் ஜாட் சாதியினரால் நிரம்பியிருப்பதாக"க் குறிப்பிடுகிறது.

இப்படி ஆதிக்க சாதிகளுள் ஒன்றாகவும், அரசியல்-பொருளாதார செல்வாக்கும் கொண்டதாகவும் உள்ள ஜாட் சாதியினர், குறிப்பாக 1990-களில் மண்டல் கமிசன் அறிக்கை அமல்படுத்தப்படுவதற்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர்.

ஜாட் சாதிவெறியர்களால் எரிக்கப்பட்ட கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள்.





இப்போது தம்மைப் பிற் படுத்தப்பட்டோர் பட்டி யலில் சேர்த்து இட ஒதுக் கீடு சலுகையை அளிக்க வேண்டும் எனக் கோரு கின்றனர். இட ஒதுக் கீடு சலுகையைப் பெற் றுள்ள ஆஹிர், குஜ்ஜார், லோதா, சைனி, யாதவ் உள்ளிட்ட பிற ஆதிக்க சாதி மேட்டுக்குடி வர்க் கத்துடன் போட்டியிடு வதுதான் ஜாட் மேட்டுக் குடி வர்க்கத்தின் நோக் கம். விவசாயத்தின் அழி வால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை ஜாட் சாதியினரை இவர்கள் தம் பக்கம் திரட்டிக் கொண்டிருக் கிறார்கள்.



ஜாட் சாதியினருக்கு எதிராக மற்ற 35 ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த அமைப்புகள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம்.

இந்த நிலையில் கடந்த 2014-ஆம் ஆண்டு அக்டோபரில் நடந்த சட்டசபைத் தேர்தலில் வென்று, தனித்து ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க. அரசில் ஜாட் சாதியினரின் பங்கு முன்பு இருந்ததைவிட வெகுவாகக் குறைந்தது. ஜாட் சாதியைச் சேராத மனோகர் லால் கட்டார் முதலமைச்சராக்கப்பட்டார். கட்சியின் முக்கிய பதவிகளிலும் ஜாட் அல்லாத பிற ஆதிக்க சாதியினர் அமர்த்தப்பட்டனர்.

உ.பி.யில் ஜாட் சாதியினரைத் திரட்டி முசுலீம்களுக்கு எதிரான முசாஃபர் நகர் கலவரத்தை நடத்திய பா.ஜ.க., அரியானாவில் ஜாட் சாதியினரைப் புறக்கணித்ததற்கு, அம்மாநில சட்டசபைத் தேர்தலில் ஜாட் சாதியினரைவிடப் பிற ஆதிக்க சாதியினர் பா.ஜ.க.விற்கு அதிக அளவில் வாக்களித்திருப்பதும்; ஜாட் சாதியினர் இன்னமும் காங்கிரசு மற்றும் அகில இந்திய லோக் தளக் கட்சியின் வாக்கு வங்கியாக இருப்பதும் காரணங்களாகக் கூறப்படுகிறது.


கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, மைய ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் எதிர்ப்பைப் புறந்தள்ளிவிட்டு, ஜாட் சாதியினரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் ஆணையை வெளியிட்டது. இந்த ஆணையை உச்ச நீதிமன்றம் கடந்த 2015-ஆம் ஆண்டில் ரத்து செய்தது. மேலும், அரியானா மாநிலத்தில் ஜாட், சீக்கிய ஜாட், பிஷ்னோய், தியாகி, ரோர் உள்ளிட்ட ஆதிக்க சாதியினருக்கு கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளில் 10 சதவீத சிறப்பு இட ஒதுக்கீடு அளிக்கும் சலுகை அளிக்கப்பட்டிருந்தது. இந்தச் சலுகையை பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதி மன்றம் ரத்து செய்தது.

இந்தப் பின்னணியில்தான் இட ஒதுக்கீடு கோரிக்கையை முன்வைத்து ஜாட் சாதி சங்கங்கள் கடந்த பிப்ரவரியில் மீண்டும் போராட்டத்தைத் தொடங்கின. இப்போராட்டம் பா.ஜ.க. அரசிற்கும், தனது மேலாதிக்கத்திற்கு சவலாக எழுந்திருக்கும் பிற ஆதிக்க சாதியினருக்கும் பாடம் கற்றுக்கொடுக்கும் நோக்கத்தில் திட்டமிட்ட வன்முறைத் தாக்குதலாக நடத்தப்பட்டது.

“ஜாட் அல்லாத 35 சாதிகளுக்கு எதிராக ஜாட்” எனப் பொருள்படும், “35க்கு எதிராக ஒன்று” என்ற சாதி வெறியைத் தூண்டிவிடும் முழக்கத்தை முன்வைத்து இக்கலவரத்திற்கு ஜாட் சாதியைச் சேர்ந்த இளைஞர்களும் உதிரிகளும் திரட்டப்பட்டனர். இந்த 35 சாதிகளுள், சைனி மற்றும் பஞ்சாபியர்கள் இக்கலவரத்தின்பொழுது குறிவைத்துத் தாக்கப்பட்டனர். மேலும், தாகுர், பனியா, பார்ப்பனர், வால்மீகி ஆகிய சாதிகளைச் சேர்ந்தவர்களின் சொத்துக்களும் குறிவைத்து அழிக்கப்பட்டன.

குஜராத் இனப்படுகொலையின்போது முசுலீம்களின் வீடுகளும், கடைகளும் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு தாக்கப்பட்டதைப் போலவே அரியானாவிலும் நடந்திருக்கிறது. ஒரே தெருவில் இருக்கும் ஜாட் சாதியினருக்குச் சொந்தமான கடைகள், வீடுகள், வாகனங்களைத் தவிர்த்துவிட்டு, அதே தெருவில் உள்ள பிற சாதியினரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு, தீ வைத்து அழிக்கப்பட்டிருக்கின்றன. பிற சாதியினரின் வீடு உள்ளிட்ட சொத்துக்களை, கடை உள்ளிட்ட வாழ்வாதாரங்களை அழிப்பதன் மூலம் அவர்களை உள்ளூரிலேயே அகதிகள் போன்ற நிலைக்குத் தள்ளும் திட்டத்தோடு ஜாட் சாதிவெறிக் கும்பல் இக்கலவரத்தை நடத்தியிருக்கிறது.

21 மாவட்டங்களைக் கொண்ட அம்மாநிலத்தின் எட்டு மாவட்டங்கள், கலவரம் நடந்த இருபது நாட்களும் ஜாட் சாதிவெறியர்களின் முற்றுகையின் கீழ் கொண்டுவரப்பட்டன. கலவரத்தைக் கட்டுப்படுத்த வரவழைக்கப்பட்ட இராணுவத்தினரை வான்



ஜாட் சாதிவெறியர்களால் முற்றுகையிடப்படும் அரியானா மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார். (உள்ளே : மனோகர் லால் கட்டார்.)

வழியாகத்தான் கலவரப் பகுதிகளில் இறக்க முடிந்தது என்பதிலிருந்தே இந்தக் கலவரம் ஒரு உள்நாட்டுப் போரைப்போல நடத்தப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ளலாம். கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பொறுப்பான போலீசிலும், சிவில் நிர்வாகத் துறையிலும் ஜாட் சாதியினர் நிரம்பியிருந்தது, ஜாட் சாதிவெறியர்களுக்குப் பக்கபலமாக அமைந்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் போடப்பட்ட ஊரடங்கு உத்தரவை, ஜாட் சாதிவெறியர்கள் பொதுச் சொத்துக்களையும், தனியார் சொத்துக்களையும் கொள்ளையிடுவதற்கும், தீயிட்டுக் கொளுத்துவதற்கும் பயன்படுத்திக் கொண்டனர். இந்த அட்டூழியத்திற்கு போலீசே பாதுகாப்புக் கொடுத்தது.

சோனிபட் மாவட்டத்தில், டெல்லி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள முர்தால் எனும் ஊரில் சாலைகளில் தடையரண்களை ஏற்படுத்தி வாகனப் போக்குவரத்தை முற்றிலும் முடக்கிய ஜாட் சாதிவெறியர்கள், வாகனங்களில் இருந்த பெண்களைப் பாலியல்ரீதியில் சீண்டியுள்ளனர்; பத்து பெண்கள் பக்கத்திலுள்ள வயல்வெளிக்குள் இழுத்துச் செல்லப்பட்டுக் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளனர். “குடும்ப கௌரவம் சந்தி சிரித்துவிடும்; அதனால் புகார் கொடுக்க வேண்டாம்” என போலீசே பாதிக்கப்பட்ட பெண்களை அச்சுறுத்தி இக்குற்றத்தை மறைத்துவிட முயற்சி செய்தாலும், அதனையும் மீறிக் கும்பல் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளான ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் இந்திய வம்சாவளிப் பெண் ஒருவரும், டெல்லியைச் சேர்ந்த மற்றொரு பெண்ணும் இது குறித்து போலீசில் புகார் அளித்திருக்கின்றனர்.

இந்தப் புகார்கள் பத்திரிகைகள் வாயிலாக அம்பலமானதையடுத்து, பஞ்சாப் மற்றும் அரியான உயர்நீதி மன்றம் இதனைப் பொதுநல வழக்காக எடுத்து விசாரித்து வருகிறது. இனிமேலும், இக்குற்றத்தை மறைக்க முடியாது என்ற நிலையில், அரியானா அரசு முர்தாலில் நடந்துள்ள கும்பல் பாலியல் வன்புணர்ச்சி குறித்து விசாரிப்பதற்குச் சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்திருக்கிறது.

“கலவரம் தீவிரமாக நடந்த எட்டு மாவட்டங்களில் மட்டும் பிற சாதியினருக்குச் சொந்தமான 2,000 கடைகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்கள், 371 வாகனங்கள், 30 பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், 75 வீடுகள், 50 உணவு விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்கள் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, 23 பெட்ரோல் நிரப்பும் நிலையங்களும், மத நிறுவனங்களுக்குச் சொந்தமான 15 கட்டிடங்களும் சூறையாடப்பட்டிருக்கின்றன.

பொதுச்சொத்துக்களை எடுத்துக் கொண்டால், 7,232 சாலையோர மரங்கள் வெட்டப்பட்டு, அவை பிற்பாடு திருடிச் செல்லப்பட்டுவிட்டன. 45 அரசு வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. 29 போலீசு நிலையங்களும், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 160 வாகனங்களும் தீவைத்து அழிக்கப்பட்டுள்ளன. போலீசு நிலையங்களிலிருந்து 170-க்கும் மேற்பட்ட துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் திருடப்பட்டுள்ளன” என இக்கலரவம் குறித்து ஆய்வு செய்ய அரசால் நியமிக்கப்பட்ட பிரகாஷ் சிங் கமிட்டியின் அறிக்கை சேதங்கள் குறித்துப் பட்டியல் இட்டிருக்கிறது. இந்தக் கலவரத்தில் அழிக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ஏறத்தாழ 20,000 கோடி ரூபாயாகும் எனக் குறிப்பிடுகிறது, தரகு முதலாளிகளின் சங்கமான அசோசெம்.

மேலும், உள்துறைச் செயலர் பி.கே.தாஸ் உள்ளிட்டு 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், டி.ஜி.பி. யஷ்பால் சிங்கால் உள்ளிட்ட 5 ஐ.பி.எஸ். அதிகாரிகள், சிவில் துறையைச் சேர்ந்த 21 உயர் அதிகாரிகள், போலீசு துறையைச் சேர்ந்த 59 அதிகாரிகள் ஆகியோர் கலவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல், ஜாட் சாதிவெறியர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்திருப்பதையும் இக்கமிசனின் அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது.

அரியானாவில் ஜாட் சாதியினரை கட்டுக்குள் வைக்க சைனி உள்ளிட்ட பிற ஆதிக்க சாதிகளுக்குக் கொம்புசீவிவிட்ட பா.ஜ.க., ஜாட்டுகள் கலவரத்தில் இறங்கியவுடன், பீதியடைந்து ஒதுங்கிக் கொண்டது. ஜாட்டுகள் நடத்திய கலவரத்தை அரசுப் படைகளைக் கொண்டு ஒடுக்கினால், அதனின் பின்விளைவுகளை எதிர்வரும் உ.பி. சட்டமன்றத் தேர்தலில் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதுடன் ஒரு உள்நாட்

டுப்போரை ஒத்த சூழலை எதிர்கொள்ள நேரும் என்றும் பா.ஜ.க. அஞ்சியது.

எனவே, பா.ஜ.க மாநில அரசு, ஒருபுறம் கலவரத்தின் பொழுது கைது செய்யப் பட்ட ஜாட்டுகளை உடன டியாகப் பிணையில் விட்டு விட்டு, இன்னொருபுறம், கலவரத்தில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு 10 இலட்ச ரூபாய் அளவிற்கு நட்ட ஈடு வழங் கப்படும் என அறிவித்துள் ளது.

●



5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், 5 ஐ.பி.எஸ். அதிகாரிகள், சிவில் துறையைச் சேர்ந்த 21 உயர் அதிகாரிகள், போலீசு துறையைச் சேர்ந்த 59 அதிகாரிகள் - என 90 அதிகாரிகள் ஜாட் சாதிவெறியர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்திருப்பதை முன்னாள் டி.ஜி.பி. பிரகாஷ் சிங் கமிட்டி அறிக்கை உறுதிப்படுத்தியிருக்கிறது.

**இ**ன்றைய நவீன சமூகத் தில், சாதி என்பது, ஒவ்வொரு சாதியையும் சேர்ந்த மேல்தட் டுக் கும்பலின் நலனுக்கோ அல்லது இந்து மதவெறி அர சியல் உள்ளிட்ட ஆளும் வர்க் கங்களின் அரசியல் நலன் களுக்கோ மட்டும்தான் பயன் பட்டு வருகிறது. பொதுவாக சாதிவெறித் தாக்குதல் என் பது முதன்மையாக தாழ்த் தப்பட்டோருக்கு எதிரான ஆதிக்க சாதியினரின் தாக் குதலாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, அரியானாவில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான தாக்குதல்களில் முன் னணியில் நிற்பது ஜாட் சாதிதான்.

வன்னிய சாதிவெறியர்கள் தலைமையில் நடை பெற்ற நத்தம் காலனி தாக்குதல் தமிழகத்தில் ஒரு எடுத் துக்காட்டு. முசாஃபர்பூரில் ஜாட் சாதிவெறியையே இந்து வெறியாக மாற்றி, இசுலாமிய மக்களுக்கு எதிரா கத் தாக்குதல் தொடுத்தது பாரதிய ஜனதா. பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் மக்கள் உள்நாட்டிலேயே அகதி களாக்கப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட மக்களையும் இசுலாமியர்களை யும் தாக்கும்போது, அதனை ஆதரித்த, அல்லது நமக் கென்ன என்று ஒதுங்கி நின்ற மற்ற சாதியினருக்கு பாடம் கற்பித்திருக்கிறது தற்போது அரியானாவில் ஜாட் சாதியினர் நடத்தியிருக்கும் வெறியாட்டம். பிற சாதி யினரின் சொத்துகளைக் குறிவைத்து அழித்து அவர் களை அகதிகளாக்கியிருப்பது மட்டுமல்ல, நெடுஞ் சாலையில் பயணம் செய்த பெண்களையெல்லாம் வளைத்துப் பிடித்து வல்லுறவுக்கு ஆளாக்கியதன் மூலம், சாதி என்பது தன் இயல்பில் ஒழுக்கமோ, நெறி களோ இல்லாத ஒரு சமூக விரோத நிறுவனம் என் பதைக் காட்டியிருக்கிறது.

தமிழகத்தில் வன்னிய சாதி வெறியர்கள் தலை மையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நத்தம் காலனித் தாக்குதலை நடத்தி, அதனைப் பயன்படுத்தி ஆதிக்க சாதியினரின் ஓட் டுக்களை அறுவடை செய்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற அன்புமணி, தற்போதைய சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந் திருக்கிறார். அன்புமணியின் தேர்தல் வெற்றிக்குப் பின், பெரும்பான்மைச் சாதி என்ற திமிரில் அந்தத் தொகுதியில் பா.ம.க.வினர் செய்த அடா வடித்தனங்கள்தான் தோல் விக்கு முக்கியக் காரணம் என்று அந்த வட்டாரத்தின் வன்னிய சாதி மக்களே கூறு வதை சென்ற இதழ் கட்டுரை யொன்றில் பதிவு செய்திருந் தோம்.

சாதி சங்கங்கள் அல்லது சாதிக் கட்சிகள் அச்சாதியைச் சேர்ந்த ஒட்டுமொத்த மக்க ளின் நலனையும் பிரதிநிதித்து வப்படுவதாகக் கூறிக்கொள் வதெல்லாம் கடைந்தெடுத்த மோசடி. சாதியும், சாதி சங் கங்களும் அச்சாதிகளைச் சேர்ந்த ஓட்டுச்சீட்டு அரசி யல் பிரமுகர்களுக்கும், கல்வி வியாபாரிகள் உள்ளிட்டு திடீர் பணக்காரர்களாக உருவெடுத்திருக்கும் மேல் தட்டு பிரிவினருக்கும்தான் அவசியமாக உள்ளது.

இக்கும்பல் தமது பலத்தைக் காட்டுவதற்கும், கலவ ரங்களில் பலியிடுவதற்கும் உழைக்கும் மக்களை அடி யாட் படையாகப் பயன்படுத்திக் கொள்கிறது. சாதி யின் பெயரால் அக்கும்பல் செய்யும் அனைத்து அட் டூழியங்களையும் நியாயப்படுத்தும் அளவிற்கு அவர் களின் மூளையைச் சலவை செய்கிறது. யுவராஜால் கோகுல்ராஜ் கொல்லப்பட்டதைக் கவுண்டர்களும், சங்கர் கொல்லப்பட்டதைத் தேவர்களும், இளவரசன் சாவுக்குத் தள்ளப்பட்டதை வன்னியர்களும் ஏன் கண் டிக்கவில்லை என்ற கேள்விக்கு விடை சுயசாதிப் பற்று என்ற தீமையில்தான் உள்ளது.

அரியானாவில் ஜாட் சாதியினர் நடத்திய கலவரத் தில் பாதிக்கப்பட்ட பிற சாதியினர், நேரம் கிடைக்கும் சமயத்தில் திருப்பிக் கொடுப்பதற்கு தயாராகி வருவதா கச் செய்திகள் வெளிவருகின்றன. இந்த அணுகுமுறை சாதி ரீதியான முனைவாக்கத்தைத்தான் தீவிரப்படுத் தும். சாதி, உழைக்கும் மக்களுக்கோ, பொதுவில் சமூ கத்துக்கோ எந்தவிதமான நற்பயனையும் தரமுடியாத ஒரு தீமை. அதனால்தான் சாதி கட்டமைப்பை வேரடி மண்ணோடு வெட்டியெறிவது அவசியமாகிறது.

● குப்பன்

# மதன் ‘காணாமல்’ போய்விட்டார்! பச்சமுத்து அரசால் பாதுகாக்கப்படுகிறார்!!

கருப்புப் பணத்தைக் கொண்டு கல்வி, பத்திரிகை, தொலைக்காட்சி, போக்குவரத்து எனப் பெரும் தொழில் சாம்ராஜ்ஜியத்தைக் கட்டியமைத்திருக்கும் எஸ்.ஆர்.எம். பச்சமுத்து போன்ற திடீர்ப் பணக்காரர்களைத்தான் தனியார்மயம் உருவாக்கி வருகிறது.

**த**ம் வாரிசுகளை மருத்துவர்களாக்கிப் பார்த்து விடுவதென்கிற லட்சியவெறியோடு வாழ்ந்துவரும் திடீர்ப் பணக்காரர்களும், அரசு உயரதிகாரிகளும் கடும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். எஸ்.ஆர்.எம். முதலாளி ‘பாரிவேந்தர்’ பச்சமுத்து தனக்கும் வேந்தர் மூவீஸ் மதனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிவித்திருப்பதால், அடுத்த ஆண்டு தம் பிள்ளைக்கு மெடிக்கல் சீட் வாங்க யாரிடம் இலட்சங்களைக் கொடுப்பது என்பதே அவர்களுடைய கவலை.

இந்த ஆண்டு மதனிடம் துண்டு சீட்டு வாங்கியவர்களின் கதை கந்தலாகிவிட்டது. 102 பேரிடம் வாங்கிய பணத்தை வேந்தரிடம் ஒப்படைத்து விட்டதாகக் கடிதத்தில் எழுதியிருக்கிறார் மதன். பணம் கொடுத்தவர்கள் பச்சமுத்துவின் வீட்டு வாசலில் நின்று சத்தம் போடவே, அவர்களிடமிருந்து பாரி வேந்தரைக் காப்பாற்ற அவருடைய வீட்டுக்கு மட்டுமின்றி, தெருவுக்கே காவல் நிற்கிறது புரட்சித் தலைவியின் காவல்துறை. பாவத்தைத் தொலைப்பதற்கு காசிக்கு போவது என்பதற்குப் பதிலாகப் பணத்தைத் தொலைத்தவர்களெல்லாம் மதனைத் தேடி காசிக்குக் கிளம்பி விட்டார்கள்.

நன்கொடை, கட்டணக் கொள்ளை வழியாகக் கிடைத்த கருப்புப் பணத்தைக்கொண்டு வளர்ந்து நிற்கும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்.




தனக்கும் வேந்தருக்குமிடையிலான கூட்டை விளக்கமாக விவரித்துள்ள மதன், கடந்த 8 ஆண்டுகளாகத் தன்னால்தான் எஸ்.ஆர்.எம். கல்லூரிகளின் இருக்கைகள் நிரம்பியது என்பதாகவும், அவ்வாறு சேர்க்கப்பட்ட மாணவர் பட்டியலை வேந்தருக்கு அனுப்பியிருப்பதாகவும் தனது ‘தலைமறைவு’க் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய ஜனநாயகக் கட்சி பிகாரில் போட்டியிடுவதற்கும், தமிழகத்தில் பா.ஜ.க. மாநாட்டை பாரி வேந்தர் நடத்திக் கொடுத்ததற்கும் எங்கிருந்து பணம் வந்தது என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார். வேந்தரின் பல்வேறு ‘தொழில்’களுக்கு வலக்கரமும் இடக்கரமும் மதன்தான் என்பதை அவரது கடிதம் தெளிவாக்குகிறது.

“மதன் தற்போது எழுதியிருக்கும் கடிதத்தை நம்ப வேண்டாம்” என்றும், “வேந்தர் மூவீஸுக்கும் பாரி வேந்தருக்கும் தொடர்பில்லை” என்று சிறிது காலத்துக்கு முன்னர் மதனே வெளியிட்டிருக்கும் அறிக்கையை நம்புமாறும் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் பாரி வேந்தர் என்று கூறப்படும் பச்சமுத்து.

பச்சமுத்துவுக்கும் மதனுக்கும் இடையிலான உறவு என்ன என்பது புலனாய்வு செய்து கண்டுபிடிக்கும் அளவுக்குக் கடினமானதல்ல. இந்த தொழிலின் நெளிவு சுளிவுகளை அறிந்தவரும், முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சரின் தந்தையுமான பா.ம.க. ராமதாஸ், வேந்தரை நோக்கி ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார்.

“எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் 2005-ஆம் ஆண்டு முதல் எந்த அடிப்படையில் மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்றது? இதற்காக

நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வுகளின் விடைத்தாட்கள், சேர்க்கப்பட்ட மாணவர்கள் 12-ஆம் வகுப்பில் அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் உள்ளிட்டவற்றை வெளியிட பச்சமுத்து தயாரா?”

இந்த எளிய கேள்விக்கு ஒருக்காலும் பச்சமுத்துவால் பதிலளிக்க முடியாது. கல்வித் தகுதியோ திறமையோ இல்லாத ஊழல் அரசியல்வாதிகள், அதிகாரிகள், பல்வேறு முறைகேடான வழிகளில் சொத்து சேர்த்த திடீர் பணக்காரர்கள் போன்றோரின் குலக்கொழுந்துகளுக்கு எஞ்சினீயர் என்றும் டாக்டர் என்றும் பட்டம் கட்டி சமூகத்தில் இறக்கி விடுவதுதான் பச்சமுத்து போன்றோர் ஆற்றிவரும் சமூகத்தொண்டு. ஆம்னி பேருந்துகளுக்கு டிக்கெட் ஏற்றும் புரோக்கர்களைப் போல, சுயநிதிக் கல்லூரிகளுகளுக்கு மாணவர்களைச் சேர்த்து விடுவதையும் புரோக்கர்கள்தான் செய்கிறார்கள்.

மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வி வழங்கும் தனியார் நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் இவ்வாறான ஏஜெண்டுகள்தாம் முக்கிய பங்காற்றுகின்றனர் என்பது யாரும் அறியாத இரகசியம் அல்ல. கடந்த இரண்டாண்டுகளுக்கு முன் வடநாட்டில் இருந்து ஆள் பிடிக்கும் ஏஜெண்டுகளிடையே நடந்த மோதல், கொலை வரை சென்ற விவகாரம் ஊடகங்களில் அம்பலமாகியுள்ளது.

தமது பிள்ளைகளுக்கு இடம் பிடிக்க பெற்றோர்கள் மதனைப் போன்ற ஏஜெண்டுகளிடம் இலட்சங்களையும், கோடிகளையும் கொட்டித் துண்டுச் சீட்டு வாங்குவதும், அந்தத் துண்டுச் சீட்டின் அடிப்படையில் கல்லூரியில் இடங்களைப் பிடிப்பதும் எல்லோரும் அறிந்த உண்மைகள் தாம். அந்த வகையில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ரியல் எஸ்டேட் தொடர்பான கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபட்டிருந்த மதன், தனது ‘தொழிலின்’ இன்னொரு பகுதியாக கல்லூரிகளுக்கு மாணவர்களைப் பிடித்துக் கொடுக்கும் ஏஜெண்டாக செயல்பட்டு வந்திருக்கிறார். சீட்டுகளை நிரப்பும் கலையில் மதன் கைதேர்ந்தவராக இருந்த காரணத்தினால்தான் பச்சமுத்து தன் இதயத்திலேயே அவருக்கு சீட்டு போட்டுக் கொடுத்திருக்கிறார்.

ஜூன் 2013-இல் மருத்துவ மாணவரின் பெற்றோர் கொடுத்த புகாரின் பேரில் பச்சமுத்துவின் வீடு, மகன்கள், மருமகன்களின் வீடு, கல்லூரிகள், வேந்தர் மூவிஸ், புதிய தலைமுறை தொலைக்காட்சி உள்ளிட்ட இடங்களில் வருமான வரித்துறை ரெய்டு நடந்து கோடிக்கணக்கில் பணம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. “அது கல்லூரியே அல்ல, மீன் மார்க்கெட். ஒவ்வொரு கோர்ஸையும் கூவிக்கூவி விற்கிறார்கள்” என்று அன்றைய நாளேடுகளில் பெற்றோர்கள் பலர் காறி உமிழ்ந்திருக்கிறார்கள்.





கல்விக் கொள்ளையன் பச்சமுத்துவின் ‘உண்மையை’ உடனுக்குடன் தரும் புதிய தலைமுறை தொலைக்காட்சி.

ஆனால் திருவாளர் பச்சமுத்துவோ, “எங்கள் கட்டணங்கள் வங்கி மூலம் மட்டுமே வசூலிக்கப்படுகின்றன. பணமாக எந்தத் தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. எஸ்.ஆர்.எம். கல்லூரி பெயரில் போலி ஆவணங்கள் தயாரித்து, என்னைப்போல் கையெழுத்திட்டு மதன் மோசடி செய்துள்ளார். இந்த மோசடியில் இருந்து தப்பிக்கவே மதன் தற்போது தற்கொலை நாடகம் ஆடுகிறார்” என்று ஒரு அறிக்கை விட்டு, அதை உலகம் நம்பிவிடும் என்று எதிர்பார்க்கிறார்.

“எங்கள் கல்வி நிறுவனங்களின் பெயரைப் பயன்படுத்தி, முறைகேடான முறையில் அப்பாவி மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களையும் ஏமாற்றி சுமார் பல கோடி ரூபாய் பெற்றுள்ளார். அவர் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதால், கட்சியிலிருந்து கடந்த 25.2.2016 அன்றிலிருந்து விலக்கப்பட்டு விட்டார்” என்கிறார் பச்சமுத்து.

மதனுக்கும், எஸ்.ஆர்.எம். குழுமத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறும் பச்சமுத்து, எஸ்.ஆர்.எம். குழுமத்தின் பணம் ரூ.200 கோடியை மதன் மோசடி செய்துவிட்டதாக புகார் செய்திருக்கிறாரே, அந்த ரூ.200 கோடி பணம் எங்கிருந்து வந்தது? பிப்ரவரி 25-ஆம் தேதிக்குப் பின்னர்தான் அத்தனை பணமும் மதனால் வசூலிக்கப்பட்டதா? இப்படியொரு மோசடியில் ஈடுபட்ட காரணத்துக்காகத்தான் மதன் நீக்கப்பட்டார் என்றால், அதனை அன்றைக்கே பகிரங்கமாக அறிவிக்காதது ஏன்? என்பன போன்ற கேள்விகளுக்கு பச்சமுத்துவால் ஒரு போதும் பதிலளிக்க முடியாது.

தமிழகத்தின் மூ...த்த பத்திரிகையாளரான மாலன்தான், கருப்புப் பண கிரிமினல் பேர்வழியான பச்சமுத்து நடத்தும் புதிய தலைமுறை வாராந்திர பத்திரிகையின் ஆசிரியர்.



●

மருத்துவம், பொறியியல், கலை அறிவியல் உள்ளிட்ட 22 கல்வி நிறுவனங்கள் கொண்ட நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காட்டாங்கொளத்தூரில் ஏரிகளையும், புறம்போக்கையும் வளைத்து 250 ஏக்கர் பரப்பளவில் வளைக்கப்பட்டிருக்கும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக வளாகம், டில்லி, அரியானா, சிக்கிம், இலங்கை என விரிந்



பாரி வேந்தர் என்ற பச்சமுத்துவின் வலது, இடது கரமாக இருந்த மதன்.

திருக்கும் கிளைகள், 500-க்கும் மேற்பட்ட எஸ்.ஆர்.எம். ஆம்னி பேருந்துகள், கருப்புப் பணத்தைப் புரட்டுவதற்குத் தோதாக வேந்தர் மூவீஸ் - என விரிந்துள்ளது பச்சமுத்துவின் சாம்ராச்சியம். பா.ம.க. ராமதாசின் கணக்குப்படி, இந்த சாம்ராச்சியத்தின் மதிப்பு ரூ.20,000 கோடி. இந்த சாம்ராச்சியத்தைக் காப்பாற்றிக் கொள்ள புதிய தலைமுறை தொலைக்காட்சி, விரிவுபடுத்திக் கொள்ள இந்திய ஜனநாயகக் கட்சி.

கடந்த இருபது ஆண்டுகளில் தனியார்மயக் கொள்கைகள் அமலாகத் தொடங்கியதற்குப் பின்னால் தங்களது கள்ளப்பணம் அல்லது கருப்புப் பணத்தை முடக்குவதற்கும் பெருக்குவதற்கும், யாரும் நெருங்கி விட முடியாத சில சுவிஸ் வங்கிகளை இந்த திடீர்ப் பணமுதலைகள் உள்நாட்டிலேயே உருவாக்கியிருக்கிறார்கள். மடங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் ஆகியவைதான் அத்தகைய சுவிஸ் வங்கிகள்.

பிறக்கும்போதே வாயில் சில்வர் ஸ்பூனுடன் பிறந்தவர் வேந்தர். அதாவது, கல்விக்கொள்ளையைத் தொடங்கும்போதே அதனை எதிர்த்து யாரும் குரல் எழுப்பத் தயங்கும் வண்ணம் புதிய தலைமுறை தொலைக்காட்சியையும் களத்தில் இறக்கியவர். மதன் பச்சமுத்துவின் வணிகத்துக்கு அடியாள் என்றால், புதிய தலைமுறை என்பது கருத்துலகின் அடியாள். அந்தத் தொலைக்காட்சி ஊழலில் ஈடுபட்டுக்கொண்டே நல்லொழுக்கம் பேசுவதை, ஒரு நுண்கலையாகவே வளர்த்து, அதற்கு நடுத்தர வர்க்கத்தை ரசிகர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

மதன் விவகாரம் வெடித்தவுடன், நல்லொழுக்கத்தின் உறைவிடமாக நடுத்தர வர்க்கத்தினரால் நம்பப்படுகின்ற புதிய தலைமுறை தொலைக்காட்சியின் முதலாளி பச்சமுத்துவா இப்படி என்று அதிர்ச்சியுற்றவர்கள் எத்தனை பேர்? தரமான கல்வி நிறுவனமாகத் தன்னைக் காட்டிக் கொண்ட எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரியிலா 62 இலட்சம் ரூபாய்க்கு மெடிக்கல் சீட் விற்கப்பட்டது என்று கொதித்து எழுந்தவர்கள் எத்தனை பேர்?

மதன் வழியாக வேந்தருக்குப் பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்கள்தான் கொதித்து எழுந்தார்களேயன்றி, மருத்துவக் கல்வியின் தரம் வீழ்ந்துபட்டதே என்று யாரும் கொதித்தெழவில்லை. கோடிக்கணக்கில் கருப்புப் பணத்தை வாங்கிக் கொண்டு டாக்டர் பட்டத்தை விற்பனை செய்த பச்சமுத்துவை எந்தக் கட்சியும் (பா.ம.க. தனது சொந்த நோக்கத்துக்காகக் குற்றம் சாட்டியதைத் தவிர) குற்றம் சாட்டவில்லை. இட ஒதுக்கீட்டினால் மருத்துவக் கல்வியின் தரம் வீழ்ச்சியடைவது குறித்து அங்கலாய்க்கும் அவாள்கள் யாரும் இவாளைப் பற்றி மூச்சு விடவில்லை. ஊடக உலகில் புதிய தலைமுறையின் போட்டி தொலைக் காட்சிகளும் கூட, பச்சமுத்துவைத் தீண்டவில்லை. பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் மட்டும்தான் குமுறினர். அவர்கள் யாரும் மதன் வீட்டைத் தேடிப் போகவில்லை, பச்சமுத்து வீட்டு வாசலில்தான் குவிந்தனர்; என்ற போதிலும் பச்சமுத்துவின் மீது போலீசு வழக்கு பதிவு செய்யவில்லை, கைது செய்யவுமில்லை.

> 2013-இல் பச்சமுத்துவின் வீடு, கல்லூரிகள், வேந்தர் மூவிஸ், புதிய தலைமுறை தொலைக்காட்சி உள்ளிட்ட இடங்களில் வருமான வரித்துறை ரெய்டு நடந்து கோடிக்கணக்கில் பணம் கைப்பற்றப்பட்டது. அச்சமயத்தில், “அது கல்லூரியே அல்ல, மீன் மார்க்கெட். ஒவ்வொரு கோர்ஸையும் கூவிக்கூவி விற்கிறார்கள்” என்று அன்றைய நாளேடுகளில் பெற்றோர்கள் பலர் காறி உமிழ்ந்தார்கள்.



இதற்கெல்லாம் என்ன பொருள்? நடுத்தர வர்க்கம் அதிர்ச்சியடையும்படி எதுவும் நடந்துவிடவில்லை என்பதுதான் பொருள். மருத்துவப் படிப்பு விற்கப்படுவது நடுத்தர வர்க்கத்துக்குத் தெரியும். அது அவர்களுக்குப் பிரச்சினையில்லை. கல்வியோ, மருத்துவமோ, குடி தண்ணீரோ காசு கொடுத்து வாங்குவதில் தவறில்லை; ஆனால், அது தரமாக இருக்கவேண்டும், தங்களுக்குக் கட்டுப்படியாகிற விலையில் இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கவலை. ஏழைகளுக்கு அது கட்டுப்படியாகாதே என்பது குறித்து அவர்களுக்குக் கவலை இல்லை. உயர்நிலைப் பள்ளி முதல் மெடிக்கல் சீட் வரை இட ஒதுக்கீடு காரணமாகத் தரம் வீழ்ச்சியடைவது மட்டும்தான் பார்ப்பன ‘உயர்’சாதியினரின் கவலையேயன்றி, பணத்தினால் தரம் வீழ்ச்சியடைவது பற்

றியோ, அறம் வீழ்ச்சியடைவது பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை.

கட்சிகள் இந்த விவகாரத்தைப் பேசாமலிருக்க காரணம், கல்வி வள்ளல்கள் எல்லா கட்சிகளிலும் நிறைந்திருக்கிறார்கள் என்பதுதான். வலது, இடது கம்யூனிஸ்டு கட்சிகளைப் போன்றோர், தொலைக்காட்சி ஸ்டுடியோ விளக்கொளியில்தான் உயிர் தரித்திருக்கின்றனர் என்பதால், அவர்கள் பச்சமுத்துவை விமரிசிப்பது என்ற தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதில்லை.



பாரி வேந்தரின் இந்திய ஜனநாயகக் கட்சி பாரதிய ஜனதாவின் உறுதியான கூட்டாளியாகையால், வியாபம் ஊழல் விவகாரத்தில் சம்மந்தப்பட்டவர்களுக்கெல்லாம் என்ன நடந்து வருகிறதோ, அதுதான் மதனுக்கும் நடக்க வாய்ப்பிருக்கிறது.


மற்றபடி, அ.தி.மு.க. அரசு பச்சமுத்துவைப் பாதுகாப்பது குறித்து நாம் வியப்படைய ஏதுமில்லை. அமைச்சர்களும், அல்லக்கை அதிகாரிகளுமே யோசிக்க முடியாத கோணத்திலிருந்தெல்லாம் ஜெயலலிதாவுக்கு முட்டுக் கொடுப்பது, ஜெயலலிதாவுக்கு எதிரான குறிப்பான குற்றச்சாட்டுகள் வரும்போதெல்லாம் அவற்றைப் பொதுவான தத்துவஞான பிரச்சினையாக மாற்றி, நடுநிலையில் நின்று அம்மாவுக்குச் சொம்படிப்பது, தமிழகத்தின் பொதுவெளியில் வெறுத்து ஒதுக்கப்பட்டிருந்த பார்ப்பனிய சிந்தனையையும் நபர்களையும் குளிப்பாட்டி நடுவீட்டில் அமர வைத்து, அவர்களை மதிக்கத்தக்கவர்களாக மாற்றுவது போன்ற நயமான நடவடிக்கைகள் காரணமாகவும், உரியவர்களுக்கு உரிய முறையில் சீட் ஒதுக்கித் தரும் பச்சையான நடவடிக்கைகள் காரணமாகவும் பச்சமுத்து ஜெயா அரசால் பாதுகாக்கப்படுகிறார்.

அச்சு ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளோ இப்படி ஒரு பிரச்சினை நடந்தது போலவே காட்டிக் கொள்ளாமல் தொழில் தருமம் காத்து வருகின்றன. சாதிக்கட்டுப்பாட்டை விட உறுதியான கட்டுப்பாடு இது. போலியான ஆவேசம் காட்டிய ஊடகங்களும், “மதனின் கள்ளக்காதல் தொடர்புகள், நடிகைகளுடனான கிசுகிசுக்கள்” என்று பிரச்சினையைக் கிளுகிளுப்பான திசைக்கு மாற்றிவிட்டன.

மதன் தலைமறைவு என்ற செய்தியே பொய்யானது என்றும், அவர் கொல்லப்பட்டிருக்க கூடும் என்றும் ஒரு செய்தி உலவுகிறது. பாரி வேந்தரின் இந்திய ஜனநாயகக் கட்சி, பாரதிய ஜனதாவின் உறுதியான கூட்டாளியாகையால், வியாபம் ஊழல் விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் என்ன நடந்து வருகிறதோ அதுதான் மதனுக்கும் நடக்க வாய்ப்பிருக்கிறது.

மதன், கருப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கு பாரி வேந்தருக்குப் பயன்பட்ட ஒரு அடியாள். தொழில் முறையில் பார்த்தால் வேண்டியபடி காரியத்தை முடித்துக் கொடுக்கும் ஒரு தரகன். இதே வேலையைக் கருத்துலகில் செய்வதற்கு, அதாவது ஒழுக்கக்கேட்டை ஒழுக்கமாகச் சித்தரிப்பது, திருட்டைத் திறமையாக காட்டுவது, விவாதத்தில் உள்ள பிரச்சினையின் மையப்பொருளைத் திசை திருப்புவது போன்ற கருப்பை வெள்ளையாகக் காட்டும் வேலைகளைச் செய்வதற்குத்தான் கொழுத்த ஊதியத்தில் அறிவுத்துறை அடியாட்களைத் தமது ஊடகங்களில் நியமித்திருக்கிறார் வேந்தர்.

ரவுடிகள் வள்ளல்கள் ஆவதைப் போல, பச்சமுத்து கருப்புப் பணம் சேர்ந்தவுடன் பாரி வேந்தர் ஆனார்.




இந்த ஊடக அடியாட்கள் கழுத்தில் தாம்புக்கயிறு சங்கிலியும் பிரேஸ்லெட்டும் அணிந்து, மதனைப் போல ஆபாசமாகத் தோன்றுவதில்லை. மதனிடம் பணம் கொடுத்து துண்டு சீட்டில் ரசீது வாங்கி வந்த அறவுணர்ச்சிமிக்க, யோக்கிய நடுத்தர வர்க்கத்தினரைப் போலத் தோற்றம் தருகிறார்கள். அந்த வர்க்கத்தின் அசட்டுத்தனமான அறச்சீற்றத்தையும், சாமர்த்தியமான இரட்டை வேடத்தையும் அறிவுபூர்வமான மொழிக்கு மாற்றி விவாதம் நடத்துகிறார்கள்.

இந்த நெறியாளர்கள் தங்களுடைய வாய் சாமர்த்தியத்தின் மூலம் ஜெயலலிதாவின் கண்டெயினரையே மறைக்கும் மாஜிக் நிபுணர்கள். தரகனின் முதல் தகுதியே வாய் சாமர்த்தியம்தானே ! மதனும் கூட சாமர்த்தியசாலிதான். ஆந்திராக்காரனையும், அசாம்காரனையும் ஒரு துண்டு சீட்டை நம்பி 62 இலட்சத்தை கொடுக்க வைத்திருக்கிறாரே! அப்படிப்பார்த்தால் அவரை விடத் திறமைசாலிகள் ஊடக அடியாட்கள். 62 இலட்சத்துக்கு மெடிக்கல் சீட்டை விற்பனை செய்யும் ஒரு நபரை யோக்கியன் என்றும், அவருக்கு யோக்கியப் பட்டம் கொடுக்கும் தங்களை நடுநிலையாளர்கள் என்றும் மக்களை நம்ப வைத்திருக்கிறார்களே!

•

குறிப்பு:

இக்கட்டுரை அச்சுக்குப் போகும்போது மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி, சத்யசாயி மருத்துவக் கல்லூரி போன்ற நிறுவனங்களில் ரெய்டு நடத்திய வருமான வரித்துறையினர், சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் கைப்பற்றியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தின் "நீட்" தேர்வு உத்தரவு காரணமாக மெடிக்கல் சீட் கிடைக்காத மாணவனின் தந்தை ஒருவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு நிர்வாகத்திடம் கேட்டு, பணம் கிடைக்காத காரணத்தினால் புகார் செய்ததைத் தொடர்ந்துதான் இந்த ரெய்டு நடந்திருப்பதாகச் செய்தி கூறுகிறது.

எஸ்.ஆர்.எம். மெடிக்கல் சீட்டுக்குப் பணம் கொடுத்து ஏமாந்ததாக அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். இதன்படி பச்சமுத்துவின் வீட்டில் தொடங்கி கல்லூரி, தொலைக்காட்சி உள்ளிட்ட எல்லா இடங்களிலும் ரெய்டு நடந்திருக்க வேண்டும். அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதிலிருந்தே தெரியவில்லையா, வேந்தர் ரொம்ம்ம்ப நல்லவர் என்று!

● தமிழரசன்



# இந்தியாவில் மரண தண்டனை: இன்னுமொரு மனுநீதி !

**இந்தியாவில் மரண தண்டனைக் கைதிகளின் சமூகப் பின்னணியை ஆராய்ந்த டில்லி தேசிய சட்டப் பல்கலைக்கழகம், அக்கைதிகள் பெரும்பாலும் சூத்திரர்களாகவும் பஞ்சமர்களாகவும் இருப்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது.**

இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் குறித்த ஒரு ஆய்வை டில்லி, தேசிய சட்டப் பல்கலைக் கழகம் நடத்தியிருக்கிறது. சாதி, மத ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இவர்களது பின்புலம் என்ன, கல்வித்தகுதி என்ன, நீதி மன்றத்தில் இவர்களது வழக்கு எப்படி நடத்தப்பட்டது, போலீசு இவர்களது வழக்கை எப்படி விசாரித்தது, அந்தக் கைதிகளுடைய சிறை வாழ்க்கை எப்படி இருக்கிறது - என்பன போன்ற பல்வேறு விசயங்களை இக்குழு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஜூலை 2013-இல் தொடங்கி ஜனவரி 2015 வரையிலான காலத்தில் நாடு முழுவதும் உள்ள தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளையும் அவரது குடும்பத்தினரையும் நேரில் சந்தித்து இந்த ஆய்வை நடத்தியிருக்கிறது இந்தக் குழு.

இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கும் 385 பேரில் 61.6% பேர் பள்ளிப் படிப்பை முடிக்காதவர்கள். 23% பேர் பள்ளிக்கூட வாசலையே மிதிக்காதவர்கள். மொத்தத்தில் சுமார் 85% மரண தண்டனைக் கைதிகள் கல்வியறிவற்றவர்கள். 385 கைதிகளில் 241 பேர் இதற்குமுன் எந்தக் குற்றத்துக்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் அல்ல. இந்த கொலைக் குற்றம்தான் அவர்களது முதல் குற்றம். பதின் பருவத்தில் குற்றம் செய்தவர்களும் தூக்கு தண்டனைக் கைதிகளாக உள்ளனர். தமது வயதை நிரூபிப்பதற்கு பல கைதிகளுக்கு பிறப்புச் சான்றிதழே இல்லை.

கைதிகளில் ஆகப்பெரும்பான்மையினரது குடும்பத்தினருக்கு கைது செய்யப்பட்ட விவரமே சொல்லப்படவில்லை. ‘‘ஒரு கையெழுத்து போட்டு விட்டு போய்விடலாம் என்று சொல்லி போலீசு கூப்பிட்டது. தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை விட்டு விட்டு வந்தேன். அப்புறம் நான் வீட்டையே பார்க்கவில்லை’’ என்று குழுவிடம் கதறி அழுதிருக்கிறார், அகிரா என்ற பெண். பெரும்பாலான கைதிகளின் கதை இப்படித்தான் இருக்கிறது என்று சொல்கிறது குழு.

போலீஸ் தங்களை சித்திரவதை செய்து வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கிக் கொண்டது என்றும், சோடிக்கப்பட்ட சாட்சிகள், தடயங்களின் அடிப்படையில்தான் தாங்கள் தண்டிக்கப்பட்டிருப்பதாகவும் 82.6% கைதிகள் கூறியதாக இக்குழு குறிப்பிடுகிறது. ஒவ்வொரு கைதியும் தாங்கள் எத்தனை நாள் என்னென்ன வகையில் சித்திரவதை செய்யப்பட்டோம் என்று விவரித்திருக்கின்றனர்.



இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கும் 385 பேரில் 85 சதவீத மரண தண்டனைக் கைதிகள் கல்வியறிவற்றவர்கள். 385 கைதிகளில் 241 பேர் இதற்கு முன் எந்தக் குற்றத்துக்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் அல்ல. இந்த கொலைக்குற்றம்தான் அவர்களது முதல் குற்றம்.

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து நிறுத்தப்படும்போது, குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் ஒரு வழக்கறிஞர் ஆஜராக வேண்டும் என்பது உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியிருக்கின்ற அடிப்படை உரிமை. ஆனால், தாங்கள் விசாரித்த வகையில் 169 பேருக்கு வழக்கறிஞர் இல்லை. போலீஸ் விசாரணைக்கு இடையில் வழக்கறிஞரைப் பார்க்கும் உரிமை 97% பேருக்கு வழங்கப்படவில்லை. எனவே, சித்திரவதைக்கு உள்ளானவர்கள் அதை வெளியில் சொல்வதற்கான வாய்ப்பு கூட இல்லை.

தனக்காக வாதாடிய வழக்கறிஞரை நீதிமன்ற அறைக்கு வெளியே சந்தித்ததே இல்லை என்று 76.7% கைதிகள் கூறியிருக்கின்றனர். சுமார் 75% கைதிகள் விசாரணை நடைபெற்ற நாட்கள் பெரும்பாலானவற்றில் சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்படவே இல்லை. வழக்கின் விசாரணையில் என்ன நடக்கிறது என்பதே தங்களுக்குப் புரியவில்லை என்றும் நீதிபதியும் வக்கீல்களும் தங்களுக்குள் பேசிக்கொள்வதை தூரத்திலிருந்து பார்க்க மட்டுமே தங்களால் முடிந்தது என்றும் பல கைதிகள் கூறியிருக்கின்றனர்.

அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் கூறியிருந்த போதிலும், விசாரணை நீதிமன்றங்கள் கடந்த 15 ஆண்டுகளில் 1500 மரண தண்டனைகளை வழங்கியிருக்கின்றன. சித்திரவதை செய்து பெறப்பட்ட வாக்குமூலம் என்பதில் தொடங்கி பல விதமான முறைகேடுகள் நிரம்பிய போலீசின் விசாரணையை அப்படியே அங்கீகரித்துத்தான் இத்தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 95% மரண தண்டனை தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் ரத்து செய்திருக்கிறது. அரிதினும் அரிதான என்று சொல்லிக் கொண்டாலும், நடைமுறையில் அது பின்பற்றப்படுவதில்லை.

நீதிமன்றம் குறிப்பாக உத்தரவிடாத வரையில் மரண தண்டனைக் கைதிகளை தனிமைச் சிறையில் வைக்க கூடாது என்பது சட்டம். இருந்த போதிலும் இந்தக் கைதிகள் தனிமைச் சிறையில்தான் வைக்கப்படுகிறார்கள். உச்ச நீதிமன்றம் தூக்கு தண்டனையை ரத்து செய்யும் வரை இந்த தண்டனையை அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

இறுதியாக, இந்தக் குழு கூறியிருக்கும் முக்கியமான விவரம் என்ன தெரியுமா? தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருப்பவர்களில் 76% பேர் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், முஸ்லிம்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். 74.1% பேர் மிகவும் ஏழைகள். தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பெண்களில் 94% பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் இசுலாமிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள். தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பயங்கரவாத குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் ஆகியோரை எடுத்துக் கொண்டால் அவர்களில் 94% பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் - என்று கூறுகிறது இந்த அறிக்கை.

●

“மரண தண்டனை விதிக்கும் அளவுக்கு கொடிய குற்றத்தை செய்தவர்கள் என்ன சாதியாக இருந்தாலென்ன, என்ன மதமாக இருந்தாலென்ன, ஏழையாக இருந்தாலென்ன, பணக்காரனாக இருந்தாலென்ன, இதெல்லாம் கூடவா சாதி, மத பேதம் பார்ப்பது?” என்று சிலர் இதைக் கேட்டவுடன் கொதித்தெழுவார்கள். அந்த சிலரில் பலர், பாரதிய ஜனதாக் கட்சியினராகவோ, அல்லது கட்சியில் இல்லாத போதிலும், இயல்பாகவே அத்தகைய கண்ணோட்டத்தை கொண்டிருக்கும் சமூகத்தின் மேல்தட்டுப் பிரிவினராகவோ இருப்பார்கள்.

தூக்கு தண்டனைக் கைதிகள் அனைவரும் குற்றமே செய்யாதவர்கள் என்பது நமது வாதமல்ல. அவர்கள் இத்தகைய குற்றங்களை இழைப்பதற்கான அரசியல், சமூகச் சூழலில் இருத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதுடன், பலர் பொய்வழக்குகளில் சிக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், சட்ட ரீதியாகத் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கான வாய்ப்புகளும் மறுக்கப்பட்ட நிலையில்தான் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிக்கையிலுள்ள விவரங்கள் காட்டுகின்றன.

கேள்வியை இப்படி திருப்பிப் போடுவோம். பார்ப்பன 'உயர்' சாதியினரும் மேட்டுக்குடி வர்க்கத்தினரும் தூக்கு தண்டனையில் சிக்காமலிருப்பது ஏன்? ஏனென்றால், அவர்கள் தமது சொந்தக் கைகளால் கொலை முதலான 'கொடுஞ்செயல்களை' செய்வதில்லை. போலீசுக்கோ கூலிப்படையினருக்கோ அத்தகைய பணிகளை 'அவுட் சோர்ஸ்' செய்து விட்டு, வெள்ளைக் காலர் குற்றங்களை மட்டும் தமக்கென ஒதுக்கிக் கொள்கிறார்கள்.



பார்ப்பன 'உயர்' சாதியினரும் மேட்டுக்குடி வர்க்கத்தினரும் தூக்கு தண்டனையில் சிக்காமலிருப்பது ஏன்? ஏனென்றால், அவர்கள் தமது சொந்தக் கைகளால் கொலை முதலான 'கொடுஞ்செயல்களை'ச் செய்வதில்லை. போலீசுக்கோ கூலிப்படையினருக்கோ அத்தகைய பணிகளை 'அவுட் சோர்ஸ்' செய்து விட்டு, வெள்ளை காலர் குற்றங்களை மட்டும் தமக்கென ஒதுக்கிக் கொள்கிறார்கள்.

தூக்கு தண்டனைக் குற்றவாளிகளுடைய குற்றச் செயல்களுக்கு அவர்களுடைய கல்வியறிவின்மை ஒரு காரணமாக இருக்கிறது என்றால், வெள்ளைக் காலர் குற்றவாளிகளைப் பொருத்தவரை அவர்களுக்கு குற்றமிழைப்பதற்கு கல்வியறிவு முக்கியக் கருவியாகப் பயன்படுகிறது. 'கீழ்சாதி' கொலைக் குற்றவாளிகளைப் போல உணர்ச்சி வயப்பட்டு இவர்கள் குற்றமிழைப்பதில்லை. அறிவுபூர்வமாகவும் நிதானமாகவும் குற்றங்களைத் திட்டமிடுகிறார்கள்.

ஒரு வீட்டைக் கொள்ளையடிப்பது, ஒரு நபரை அல்லது குடும்பத்தைக் கொலை செய்வது என சிறிய இலக்குகளை இவர்கள் வைத்துக் கொள்வதில்லை. சீட்டுக் கம்பெனி மோசடி முதல் பங்குச் சந்தை மோசடி, ஆன் லைன் டிரேடிங் முதலான கலர் கலரான குற்றங்கள் மூலம் கோடிக்கணக்கானோரைக் கொள்ளையடித்து தற்கொலைக்குத் தள்ளுகிறார்கள்.

இவர்களைத் 'தனிப்பட்ட' ஆதாயத்துக்காக கொலை செய்யும் குற்றவாளிகளாகச் சட்டம் கருதுவதில்லை. அம்பானி, அதானி, எஸ்ஸார், டாடா போன்றவர்கள் தனிநபர்கள் அல்ல. அவர்கள் கார்ப்பரேட் கம்பெனிகளின் தலைவர்கள். கம்பெனி என்ற 'பொது' நிறுவனத்தை தனிநபராக கருத முடியாது என்பதால், அவர்களது செயல்கள் தனிநபர்களின் கிரிமினல் குற்றங்களாக கருதப்படுவதில்லை. மாறாக, இலாபமீட்டுதல் என்ற நியாயமான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளாகவே சட்டத்தால் பார்க்கப்படுகின்றன. அதனால்தான் ஆயிரக்கணக்கான பேரைத் தற்கொலைக்குத் தள்ளும் நில ஆக்கிரமிப்பு முதல் சீட்டுக் கம்பெனி மோசடி வரையிலான குற்றங்களை ஆயுள் தண்டனை, மரண தண்டனை போன்ற கடும் தண்டனைக்குரிய குற்றங்களாக சட்டம் கருதுவதில்லை.

வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், சமூகத்துக்கு எதிரான குற்றங்கள் சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்படாத நிலையிலும் மென்மையாகவே தண்டிக்கப்படுகின்றன. கொலை, கொள்ளை, வல்லுறவு போன்ற குற்றங்களைத் தூண்டுகின்ற விளம்பரங்கள், ஊடக காட்சிகள், சாதி மத வெறிப் பிரச்சாரங்கள் போன்றவை தண்டிக்கப்படுவதில்லை. மாறாக, கொலை, கொள்ளை, வல்லுறவு போன்ற குற்றங்களை இழைக்கின்ற தனி நபர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அதிலும் கூட உழைக்கும் வர்க்கத்தினர், ஒடுக்கப்பட்ட சாதியினர் மற்றும் சிறுபான்மை மதத்தினர் ஒரு தலைப்பட்சமாக தண்டிக்கப்படுகிறார்கள்.

நேரடி சாட்சியங்களே இல்லாத வழக்கில் அப்சல் குரு தூக்கிலிடப்பட்டார். குல்பர்க் சொசைட்டி படுகொலையின் சூத்திரதாரிகள் முதல் மேலவளவு கொலைகாரர்கள் வரை யாருக்கும் மரண தண்டனை விதிக்கப்படவில்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமமல்ல என்பதை இவை காட்டுகின்றன. தனிநபர் குற்றங்கள் தண்டிக்கப்படுவதும், சமூக குற்றங்கள் அங்கீகரிக்கப்படுவதும், சட்டமே சமமாக இல்லை என்பதை விளக்குகின்றன. சட்டம் சமமாக இருக்க முடியும் என்று கருதுவது ஏமாளித்தனம் என்பதைத்தான் மரண தண்டனைக் குற்றவாளிகள் குறித்த இந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது.

• மணி

## அறிவிப்பு

எதிர்வரும் ஆகஸ்டு 2016 முதல் புதிய ஜனநாயகம் இதழின் விலையை ரூ.15.00 ஆக உயர்த்துவதெனத் தீர்மானித்திருக்கிறோம். அச்சுக் காகிதம், அச்சகக் கட்டணம் உள்ளிட்ட இதழ் தயாரிப்பு மற்றும் நிர்வாகச் செலவுகளின் உயர்வால், இந்த விலையேற்றம் தவிர்க்கவியலாதது. விளம்பரங்கள் மூலம் இலட்சக்கணக்கில் வருமானம் ஈட்டும் முதலாளித்துவப் பத்திரிகைகள்கூட இதழின் விலையை உயர்த்திவரும் சூழலில், ஒரு மார்க்சிய - லெனினிய அரசியல் பத்திரிகையை கட்டுப்படியாகாத விலையில் தொடர்ந்து வெளியிடுவது சாத்தியமில்லாதது என்பதைப் புரிந்துகொண்டு, வாசகர்களும் முகவர்களும் சந்தாதாரர்களும் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

– ஆசிரியர் குழு

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



முகத்தில் இரசாயனக் கலவை ஊற்றப்பட்ட நிலையில் சோனி சோரி. (கோப்புப் படம்)

அமைப்பைக் கலைக்குமாறு உத்தரவிட்டது, உச்ச நீதி மன்றம். தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட பினாயக் சென் விடுதலை செய்யப்பட்டார்.

மன்மோகன் சிங் அரசு காட்டுவேட்டையிலிருந்து சற்றுப் பின் வாங்கியதை, கனிம வளங்களைக் கொள்ளையிடக் காத்திருந்த பன்னாட்டு நிறுவனங்களும், இந்திய தரகு முதலாளிகளும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அக்கும்பல், காங்கிரசு அரசு செய்யத் தவறியதை, செய்து முடிக்காமல் பாதியில் நிறுத்தியதைச் செய்து முடிப்பதற்காகவே மோடியை பிரதமர் பதவியில் அமர்த்தியது.

காங்கிரசு அரசு நடத்திய காட்டு வேட்டையை, மோடியும் பா.ஜ.க. அரசும் மிஷன் 2016 என்ற பெயரில் தொடர்ந்தும், முன்னைக் காட்டிலும் தீவிரமாகவும் நடத்தத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக, உச்சநீதி மன்றத்தால் தடை செய்யப்பட்ட சல்வா ஜுடும், இப்பொழுது, ஜன் ஜாக்ரான் அபியான், சமாஜிக் ஏக்தா மன்ச், விகாஸ் சங்கர்ஷ் சமிதி, நாக்ரிக் ஏக்தா மன்ச் என்ற பெயர்களில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், சட்டீஸ்கர் மாநில அரசு ''துணைப் படைகள் சட்டம்'' என்றொரு கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் மாவட்ட ரிசர்வ் படை என்ற அரசு பயங்கரவாத அமைப்பை உருவாக்கி, அதில் சல்வா ஜுடும் அமைப்பில் செயல்பட்டு வந்த குண்டர்களைச் சேர்த்து, அவர்களைச் சட்டபூர்வ போலீசாக்கிவிட்டது. மக்கள் விரோத, சட்டவிரோத அமைப்பாக அம்பலப்பட்டுப் போன சல்வா ஜுடுமை, மோடி கும்பல் சட்டபூர்வமாக்கி விட்டது.

மிஷன்-2016 தொடங்கப்பட்ட நான்கே மாதங்களில் 70 போலி மோதல் கொலைகள் பஸ்தரில் நடந்துள்ளன. பெக்தபள்ளி, சின்ன கேலூர், பெத்த கேலூர், கண்டேடம், பர்கிச் செரு, நேந்த்ரா, பெத்த பாரா, மான்ஹெம் ஆகிய கிராமங்கள் தாக்கப்பட்டு, பழங்குடியின மக்களின் அற்ப உடமைகளும் கொள்ளையடிக்கப்பட்டு, அவர்களின் வீடுகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன.

இந்த அட்டூழியங்களை அம்பலப்படுத்திப் போராடி வரும் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஆசிரியரும், ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்தவரான சோனி சோரியின் முகத்தில் அபாயகரமான இரசாயனக் கலவை வீசப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார். இவர் மட்டுமின்றி, ஜக்தல்பூர் பகுதியில் இயங்கிவரும் ''ஜக்லக்'' என்ற பெண் வழக்கறிஞர் குழு, போலீசின் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட பழங்குடியினப் பெண்களுக்காக 40-க்கும் மேற்பட்ட வழக்குகளை நடத்திவருகிறது. இதனால், இக்குழுவைச் சேர்ந்த வழக்குரைஞர்களை சட்டீஸ்கர் மாநிலத்தை விட்டே வெளியேறுமாறு போலீசே நிர்பந்தம் கொடுத்துவருகிறது.

மேலும், பத்திரிக்கையாளர்கள் மாலினி சுப்ரமணியம், பேலா பாட்டியா ஆகியோர் அச்சுறுத்தப்பட்டு, அந்த மாநிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மனித உரிமை செயல்பாட்டாளரும் மருத்துவருமான சாய்பால் ஜனா, கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பழங்குடியின மக்கள், மாவோயிஸ்டுகள், ஜனநாயக மற்றும் மனித உரிமை அமைப்புகளின் எதிர்ப்புகளை அரசு பயங்கரவாதத்தை ஏவி நசுக்குவதன் மூலம் பிர்லா, ஜின்டால், வேதாந்தா, அதானி, ஜி.எம்.ஆர். உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களும் இந்திய தரகு முதலாளிகளும் சட்டீஸ்கர் மாநிலத்தின் கனிம வளங்களைத் தடையின்றிக் கொள்ளையடிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது, மோடி ராமன் சிங் கும்பல்.

குறிப்பாக, ''ஹஸ்தியோ அரந்த்'' வனப்பகுதியில், அதானியின் நிறுவனத்திற்கு 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட நிலக்கரி சுரங்கங்கள் இயங்குவதற்குத் தடையாக இருக்கும் சட்டங்களை ரத்து செய்யும் நோக்கில், அவ்வனப்பகுதி மீது பழங்குடியினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது; அங்கு சுரங்கம் தொடங்க கிராம சபையின் அனுமதி தேவையில்லை என்று கடந்த ஜனவரி 8 அன்று ஒரு அரசாணையை சட்டீஸ்கர் பா.ஜ.க. அரசு வெளியிட்டிருக்கிறது. பல லட்சம் கோடி ருபாய் மதிப்புள்ள தங்கச் சுரங்கம் வெறும் 12 சதவீத ராயல்டிக்கு வேதாந்தா நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பஸ்தார் பகுதியில் புதைந்து கிடக்கும் கனிம வளங்களைக் கொள்ளையிடத் துடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்துப் பழங்குடியின மக்கள் போராடுகிறார்கள் என்றால், தஞ்சை பகுதி விவசாயிகள் தமது நிலங்களைப் பாதுகாத்துக் கொள்ள மீத்தேன் திட்டத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். எனவே, இன்று பஸ்தார் பகுதி பழங்குடியின மக்கள் மீது நடத்தப்படும் காட்டுவேட்டை, மிஷன்-2016 நடவடிக்கைகள், நாளை தஞ்சை பகுதி விவசாயிகளை நோக்கியும் திரும்பக் கூடும். பஸ்தாரும் தஞ்சையும் தூரப் பிரதேசங்களல்ல, பஸ்தார் பழங்குடியின மக்களும் தஞ்சை விவசாயிகளும் வேறு வேறானவர்கள் அல்ல என்பதைத் தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

● அழகு

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# ஐ.டி. துறையில் தொழிற்சங்க உரிமை! பு.ஜ.தொ.மு.வின் வெற்றி!

''தொழிலாளர் சட்டங்கள் தமிழகத்தில் உள்ள ஐ.டி. நிறுவனங்களுக்கும் பொருந்தும். ஐ.டி. ஊழியர்கள் தொழிற்சங்கம் அமைத்துக்கொள்ள எந்தத் தடையும் கிடையாது. ஐ.டி. ஊழியர்களுக்கு பணியிடத்தில் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் அனைத்தையும் தொழிற்தகராறு சட்டம் 1947-இன் கீழ் தீர்த்துக் கொள்ளலாம்.

வேலை நீக்கம் செய்யப்பட்டாலோ, ஆட்குறைப்பு செய்தாலோ தொழிலாளர் ஆணையர் முன் வழக்கு எழுப்பி போராடலாம்'' என்று ஐ.டி. ஊழியர்களின் உரிமைகளை ஒப்புக்கொண்டு புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணிக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார், தமிழக அரசின் தொழிலாளர் துறை செயலர் குமார் ஜெயந்த்.

''இதில் புதிய விசயம் எதுவும் இல்லை'' என்று சொல்லியிருக்கிறார் சி.ஐ.டி.யு. வின் பொதுச்செயலர் தபன் சென். ஆனால் மார்க்சிஸ்டுகள் ஆட்சி செய்த மே.வங்கத்திலோ, ஆட்சி செய்யும் கேரளத்திலோ ஐ.டி. துறையில் தொழிற்சங்கம் இல்லை. தமிழகத்திலும் கூட சங்கம் இல்லாத நிலைதான் இருந்தது. 2014 இறுதியில் டி.சி.எஸ். நிறுவனம் 30,000 பேரை ஆட்குறைப்பு செய்யவிருக்கிறது என்ற செய்தி வெளிவந்ததை தொடர்ந்து அதற்கெதிரான போராட்டத்தை தொடங்கியது பு.ஜ.தொ.மு. ஜனவரி 10, 2015 அன்று இந்தியாவிலேயே முதன் முறையாக ஐ.டி. ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தைத் தொடங்கியது.




தமிழகத்தில் உள்ள ஐ.டி. நிறுவனங்களில் தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப்படுத்தக் கோரி, சனவரி 2015-இலேயே பு.ஜ.தொ.மு. சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இவ்விசயத்தில் தமிழக அரசு தனது முடிவை அறிவிக்க வேண்டும் என உயர்நீதி மன்றம் உத்தரவிட்டும், ஜெ. அரசு வழக்கம்போல பதிலே சொல்லாமல் இழுத்தடித்ததால், தமிழக அரசின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. பு.ஜ.தொ.மு. நடத்திய விடாப்பிடியான போராட்டத்தின் விளைவுதான் அரசின் இந்த அறிவிப்புக் கடிதம். பல இலட்சம் ஐ.டி. ஊழியர்களின் அடிப்படை உரிமை தொடர்பான இந்த அறிவிப்பை பகிரங்கமாக வெளியிடுவதற்குப் பதிலாக, காதும் காதும் வைத்தாற்போல ஒரு கடிதமாக கொடுத்திருப்பதிலிருந்தே, அரசின் நோக்கத்தை புரிந்து கொள்ள முடியும்.

தபன் சென் கூறுவது போல இது ஏற்கெனவே தெரிந்த விசயம்தான் என்றால், தொழில் தகராறு சட்டம் ஐ.டி. நிறுவனங்களில் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? அந்த சட்டத்தின் கீழ் ஆட்குறைப்பை சி.ஐ.டி.யு. தடுத்து நிறுத்தியிருக்கிறதா? அல்லது தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் ஐ.டி. நிறுவனங்களை ஒப்புக்காவது சோதனையிட்டிருக்கிறார்களா? இந்தியாவில் எங்கும் இது நடந்ததில்லை. ஐ.டி. ஊழியர்கள் தொழிலாளர்களே அல்ல என்றும் அவர்கள் அனைவரும் மேலாளர்கள் (executives) என்றும் ஐ.டி. நிறுவனங்கள் சாதிக்கின்றன.

மத்திய மாநில அரசுகளும் ஐ.டி. துறையை சட்டத்துக்கு அப்பாற்பட்ட கொத்தடிமைக் கூடாரமாக அங்கீகரித்து நடத்தி வருகின்றன. இந்தச் சூழலில், பு.ஜ.தொ.மு. பெற்றிருக்கும் இந்த வெற்றி குறிப்பிடத்தக்கது. தற்போது 'ஆட்டோமேசன்' என்ற பெயரில் சுமார் 20% ஊழியர்களை ஆட்குறைப்பு செய்ய திட்டமிட்டு வருகின்றன ஐ.டி. நிறுவனங்கள். மோடி அரசோ, உற்பத்தி துறையிலேயே தொழிலாளர் சட்டங்களை ஒழித்துக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் உடனே சங்கமாக அணிதிரள்வதன் மூலமும் போராடுவதன் மூலமும்தான் பெற்றிருக்கும் வெற்றியை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். வேலை போனால் நீதிமன்றத்துக்குப் போய்க் கொள்ளலாம்; அதற்கு முன் சங்கம் அமைத்து வம்பை விலைக்கு வாங்க வேண்டாம் என்று சாமர்த்தியமாக சிந்திக்கும் பட்சத்தில், கிடைத்த வெற்றியும் பறிபோய் விடும் என்பதை ஐ.டி. ஊழியர்கள் உணரவேண்டும். ●